ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்

பராங்குஶ திருஅவதார ௵5108 ஸர்வதாரி௵ மாசி 19, 3-3-2009

க்ரந்த பரிபாலந ட்ரஸ்ட் வெளியீடு

FOR PRIVATE CIRCULATION ONLY




ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம்।।

जीवोज्जीवनसङ्कल्पं हरेः पूर्णं विधित्सुकाम्।श्रियं सत्याशिषं कुर्वत्सदाचार्यपरम्परा ।।
यावत् , विजयतां तावत्सीमातिक्रान्तवैभवा ।श्रीशैलेशदयापात्रनाम्नीयं पत्रिका शुभा ।।

ஆசிரியர்: R.ரகுராமன் (பாலாஜி)9994606427
24/71,புத்தூர் அக்ரஹாரம் திருச்சி-620 017.
துணையாசிரியர்: K.ஆராவமுதன் (98942 12038)

## பொருளடக்கம்

**மலர் 1 இதழ் 12** **பக்கம்**


| | |
|---|---|
| புருஷகார வைபவம் | 1–07 |
| அந்திமஸ்ம்ருதி வேண்டா | 08–09 |
| திருக்கச்சிநம்பி வைபவம் | 10 |
| மொழியைக்கடக்கும் பெரும்புகழான் | 11–18 |
| ஸ்ரீரங்கராஜஸ்தவவுரை | 19–20 |
| சது:ஶ்லோகீ வ்யாக்$_2$யானம்,விவரணத்துடன் | 21–24 |
| வரவரமுநி தி$_3$நசர்யா (உரையுடன் கூடியது) | 25–32 |
| பெரியாழ்வார்திருமொழி வ்யாக்$_2$யாநங்கள் | 33–40 |
| கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்$_2$யாநங்கள் | 41–48 |





**ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயணஜீயர்ஸ்வாமி – கோயில் வித்வான் ஸ்ரீ.உ.வே.நரஸிம்ஹாசார்யஸ்வாமிக்கு கோபாலோபாயநம் விருது வழங்குதல்.**

## புருஷகார வைபவம்
## (ஸ்ரீ.உ.வே.ந்யாயவேதாந்த வித்வான் ரங்கஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி *1934*ல் உபந்யஸித்தது)

அபராதமுடைய சேதநர்க்கு – ஒருஸமயத்தில் ஸத்வகுணம் தலையெடுத்து எம்பெருமானை அடைந்து உஜ்ஜீவிக்கக் கருதியபோது, தாம் முன்பு செய்துள்ள பாபத்தின் மிகுதியைக்கண்டு அச்சமுண்டாகும். இவ்வச்சம் சிறிதுமின்றி அவனை எளிதில் அடைந்து உய்வதற்காகக் குற்றங்களைப் பொறுப்பிக்க, அவன் திருமார்பில் இறையுமகலாது பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிறாள். ஆதலால் அவனை எளிதிலடைந்துய்யலாம் என்பதைத் தெளிவாய் எடுத்துரைப் பதற்காக நம்பூர்வாசார்யர்கள் பலவிடங்களிலும் புருஷகாரவைபவத்தை வெளியிட்டுள்ளார்கள்.

புருஷகாரம் என்ற சொல்லிற்குப் பல பொருள்களுண்டு. புரு – ப$_3$ஹு, ஸநோதி–த$_3$த$_3$ாதி புருஷ:, புருஷம் கரோதீதி புருஷகார:. இதன் பொருளாவது – ஈஶ்வரனைச் சேதன விஷயத்தில் மிகுதியாகக் கொடுக்கும்படி செய்கிறாள் என்பதாம். பெரியபிராட்டியார் எம்பெருமானை நோக்கி அபராதமுடைய சேதநனைச் சுட்டிக்காட்டி, ''இவனைக் கோபத்திற்கு விஷயமாக்காமல் இவன் வேண்டிற்றெல்லாம் கொடுத்தருளும்; இங்ஙனம் கொடுத்தாலன்றோ தேவரீர் 'வேண்டிற்றெல்லாம் தரும் கோதிலன்' என்ற விருதைப் பெறுவீர்'' என்று அருளிச்செய்வாள். இதனைக்கேட்ட எம்பெருமானும் அவ்வாறே கொடுத்தருள்வன்.

இன்னும் ''பூரணத்வாத் புருஷ: க்ஷமாதி$_3$ பூர்ணம் கரோதீத்யர்த்த$_2$:''. எம்பெருமானைக் காருண்யாதி குணபூர்ணனாகச் செய்கிறாள் என்பது இதன் பொருளாகும். ஸர்வேஶ்வரன் ஸமஸ்த கல்யாணகுண பூர்ணனாயிருந்தாலும், ஸ்வாதந்த்ர்யத்தால் அபராதமுடைய சேதநனைக் கண்டவிடத்து 'இவனை நரகத்திற் போட்டு வருத்துவேன்' என்று சீற்றமுண்டாம்போது, க்ருபை முதலிய குணங்கள் தலைமடிந்து கிடக்கும். அப்போது பிராட்டியார் எம்பெருமானை நோக்கித் ''தேவரீர் இந்தச் சேதநன் விஷயத்தில் இப்படிச் சீற்றங்கொள்ளலா காது; மணற்சோற்றில் கல்லாராய்வாருண்டோ? குற்றஞ்செய்யாதார் எவர் தாமிருக்கின்றனர்? இப்படி வந்தடைகின்ற சேதநனை வெளியே தள்ளிக் கதவடைத்துவிட்டால் வேறெவர்தாம் தேவரீரை வந்தடைவார்கள்? அபராதமுடைய சேதநனை ரக்ஷித்தாலன்றோ தேவரீர் கருணாகரர் என்ற பெயரைப் பெறுவீர்' என்று ஸ்வாதந்த்ர்யத்தால் மறைந்திருந்த க்ருபை முதலிய குணங்களை

வெளிப்படுத்தி அபராதமுடைய சேதநனை அவனுடைய க்ருபைக்கு விஷயமாக்குவாள்.

மேலும், ப்ரு–பாலநபூரணயோ: எம்பெருமானை ரக்ஷகனுகச் செய்கிறுள் என்றும் புருஷகார ஶப்தத்திற்குப் பொருள் கொள்வதுமுண்டு. எம்பெருமான் அபராதமுடைய சேதநனைக்கண்டு, 'இவனை ரக்ஷிக்கமாட்டேன்' என்று வெறுக்கின்ற காலத்தில் பிராட்டியார் 'அபராதமுடைய இவனை ரக்ஷிக்காத போது தேவரீருக்கு ஸர்வரக்ஷகத்வம் ஜீவிக்காதே' என்று மன்றுடி ரக்ஷிக்கும்படி செய்வாள்.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணவிஶேஷம் பெரியபிராட்டியாருக்கே யுள்ளது. எல்லாக் கல்யாண குணங்களையுமுடைய எம்பெருமானுக்கு இந்த குணம் இல்லையோவென்னில்; ஸர்வேஶ்வரன் நித்யேச்சையால் இன்னின்னுருக்கு இன்னின்னதுண்டு என்று ஸங்கல்பித்துள்ளானுதலால் இந்தப் புருஷகாரத்வம் பிராட்டியாருக்கேயுள்ளதென்றுல் ஒரு குறையுமின்றெனக.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணத்தை ஜீவிக்கும்படி செய்கின்ற சில குணங்களுண்டு. அவை; க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹஶேஷத்வம் என்பன. இவற்றுள் க்ருபையாவது – பிறர் துக்கப்படுதலைக் கண்டு ஸஹியாமை. பாரதந்த்ர்யமாவது – பராதீநமாயிருத்தலாம். அஃதாவது நாயகன் சொற்படி அடங்கியிருத்தலாம். அநந்யார்ஹத்வமாவது – நாயகனையொழிய பிறருக்குரிமை யாகாதிருத்தலாம்.

அபராதமுடைய சேதநனை எம்பெருமானேடு சேர்ப்பதற்குரிய முயற்சி செய்தற்கு க்ருபைவேண்டும். ஸ்வதந்த்ரனுன எம்பெருமானை வஶீகரிக்கும் போது பணிவிடையால் வஶீகரிக்கவேண்டுகையால் பாரதந்த்ர்யமும் வேண்டும். எம்பெருமான் பிராட்டியாரிருக்கும் நிலைமைகண்டு நம்மையொழிய பிறரொருவர்க்கும் உரிமையாகாமல் நமக்கே அதிஶயத்தை விளைக்கின்றுளாத லால் இவள் சொல்வதெல்லாம் நம் காரியமாகும்' என்று இவள் சொன்னபடி செய்கைக்கு ஹேதுவாக அநந்யார்ஹத்வமும் வேண்டும்.

உலகத்தில் சிறந்த பதவியிலிருக்கின்ற ஒருவனிடத்தில் காரியஸித்தி யடைய அவன் மனைவியின் சிபார்சை விரும்புவனேல் அவளுக்கு முன்னுரைக்கப்பெற்ற க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களும் நிறைந்திருக்கவேண்டும். க்ருபையிருந்தாலன்றிப் பிறரிடத்தில் இரக்கமுண்டாக மாட்டாது. நாயகனுக்கடங்கி நடந்து அவன் மகிழ்ச்சிக்குரிய பணிவிடையைச் செய்தாலன்றி அவன் இவளுக்கு வஶப்படமாட்டான். ஆதலால் பாரதந்த்ர்யமும் வேண்டும். 'இவள் நம்மையன்றிப் பிறரொருவர்க்கும் உரிமைப்படாது நமக்கே அதிசயத்தை விளைக்கின்றுள்; ஆதலால் இவள் நம்மோடு மன்றுடிச் செய்யச்சொல்கின்ற காரியமும் நம் காரியமேயாம்' என்று கருதுவதற்கு அநர்யார்ஹத்வமும் வேண்டும். ஆக, இந்த மூன்று குணங்களுள்

க்ருபை சேதநரைக் கண்டிரங்குவதற்குரியதாயிருக்கும். பாரதந்த்ர்யம் ஸ்வதந்த்ரனை ஈஶ்வரனை வஶப்படுத்துவற்குரியதாயிருக்கும். அநந்யார்ஹத்வம் பிறர் காரியம் செய்யும்படி இவள் சொல்லியபடியே அவன் செய்து தலைக்கட்டுவதற்குரியதாயிருக்கும். இங்ஙனம் இந்த மூன்று குணங்களின் வேறுபாடறிந்து கொள்க.

இனி, இந்த மூன்று குணங்களையும் பிராட்டியார் வெளிட்டபடி விளக்கப் பெறும்– எம்பெருமான் ஸாதுக்களைப் பரிபாலிக்கும் நிமித்தமாக எந்தெந்த வடிவோடு அவதரிக்கின்றானோ அந்தந்த வடிவுக்கேற்றபடி பிராட்டியாரும் அவதரிக்கின்றாளென்பது நியமம். அந்த நியமப்படி ஸர்வேஶ்வரன் சக்ரவர்த்திக்குத் திருக்குமாரனாக அவதரித்தபோது பிராட்டியாரும் ஜநகராஜன் திருமகளாக அவதரித்தாள். அப்பொழுது க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களையும் வெளியிட்டுள்ளாள். ''பிராட்டி முற்படப்பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக. நடுவிற்பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக. அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக'' என்று லோகதேஶிகன் அருளிச்செய்ததாலும் அறியலாம்.

முதற்பிரிவாவது –ஸீதாப்பிராட்டியார் சக்ரவர்த்தித்திருமகனோடு தண்டகாரண்யத்தில் எழுந்தருளியிருந்தபோது இராவணன் பிரித்தான் என்ற வியாஜத்தாலே பெருமாளை விட்டுப்பிரிந்து இலங்கையில் அசோகவநத்தில் எழுந்தருளியிருந்ததாம். இந்தப் பிரிவில் ''தே₃வ்யா காருண்யரூபயா'' என்று கருணையே ஒரு வடிவு கொண்டுளதோ என்று சொல்லத்தக்க பிராட்டியாரின் க்ருபை வெளியாகிறது. எவ்வாறெனின்; தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தாள். இங்ஙனஞ் சிறையிலிருந்தபோது கொடிய ராக்ஷஸப்பெண்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டு படாதபாடெல்லாம் படுத்தினார்கள். அதுஸமயம் த்ரிஜடை– இராவணாதியர் அபஜயமடைந்து பெருமாள் வெற்றியடைந்ததாகத் தான் ஸ்வப்நங்கண்டதை இராக்ஷஸப் பெண்களுக்குத் தெரிவித்தாள். இதனைக் கேட்டு அப்பெண்கள் நடுநடுங்கினார்கள். இந்நிலைகண்ட பிராட்டியார் ''ப₄வேயம் ஶரணம் ஹி வ:'' நானிருக்கும்போது நீங்கள் எதற்காக வருந்துகின்றீர்கள் என்று அபயப்ரதானஞ் செய்தாள். இஃதல்லாமலும் இராவணன் போர்க்களத்தில் உயிர் துறந்து கிடந்தபொழுது அநுமன் பிராட்டியிடத்தில் வந்து ''தாயே! இராவணன் இறந்துபட்டான். ஆதலால் முன்பு துன்புறுத்திய இந்த இராக்ஷஸப்பெண்களைச் சித்திரவதம் பண்ணும்படி அடியேனுக்கு உத்தரவு அளிக்கவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது ''பாபாநாம் வா ஶுபா₄நாம் வா வத₄ார்ஹாணும் ப்லவங்க₃ம கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந் நாபராத்₄யதி॥'' என்று அநுமனுக்கும் உபதேஶித்தாள். தன்னை ஒழிவின்றித் துன்புறுத்திய இராக்ஷஸப் பெண்களிடத்தில் இவ்வளவு பரிவுடையவளாயிருந்தாளென்

பதைக்காட்டிலும் இவள் க்ருபையை வெளியிடுவதற்கு வேறு உதாஹரணம் எடுத்துரைக்க வேண்டுமோ?

நடுவிற்பிரிவாவது– இராவண வதம் முடிந்தபின்னர் பிராட்டியார் பெருமாளுடன் திருவயோத்தியில் எழுந்தருளியிருந்தபொழுது பிராட்டியார் திருவயிறு வாய்த்திருந்தாள். அதுஸமயம் பெருமாள் நகரசோதனையின் பொருட்டு இராத்திரியில் தனிமையாக எழுந்தருளி ஆராய்ந்து வருகின்ற ஸமயத்தில், ஒரு வண்ணன் நெடுநாள் பிறந்தகத்திலிருந்து வந்த தன் மனைவியை நோக்கி, ''நீ இத்தனை நாள் என்னைவிட்டுப் பிரிந்திருந்தாய்; ஆதலால் உன்னைச் சேர்த்துக்கொள்ளமாட்டேன்; பத்துமாதம் தன்னை விட்டுப்பிரிந்து இராவணன் வீட்டிலிருந்த ஸீதையைச் சேர்த்துக்கொண்டிருக்கிற இராமனைப்போல் என்னை எண்ணினையோ?'' என்று கூறினன். இதனை இராமபிரான் கேட்டு மனக்கவலை யுற்று எப்படியாவது லோகாபவாதத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று கருதினர். பின்னர் கர்ப்பிணியாயிருப்பாரின் விருப்பத்தை செய்வதென்ற முறையை மேற்கொண்டு இராமபிரான் ஸீதாப்பிராட்டியை நோக்கி ''உனக்கு இப்பொழுதுள்ள விருப்பத்தை உரைப்பாயாகில் அதனைச் செய்கிறேன்' என்று கேட்டார். அப்பொழுது பிராட்டியார், 'முன்பு வநவாசஞ் சென்றகாலத்து ருஷிகளின் ஆஶ்ரமங்களிற்சென்று அவர்கட்டுப் பணிவிடைசெய்ததுபோல இப்பொழுதும் தபோவநங்களையும், கங்காதீரங்களையும் கண்டுகளித்து ஆங்குள்ள மஹர்ஷிகளின் பாதஸேவவையுஞ்செய்து வரவேண்டுமென்று என் மனம் விரும்புகிறது' என்றுரைத்தாள். இதனைக்கேட்ட பெருமாள், இளைய பெருமாளை யழைத்து லோகாபவாத விஷயத்தை அந்தரங்கமாகத் தெரிவித்து 'ஸீதையை அழைத்துக்கொண்டு போய் வநத்தில் விட்டு வருவாய்' என்று கட்டளையிட்டனர். இளையபெருமாளும் அப்படியே பிராட்டியையும் அழைத்துக்கொண்டு கங்கைக்கரையைக் கிட்டினபோது மனமடங்காத துன்பமுற்று பெருமாள் நியமித்ததை விண்ணப்பித்தனர். இதனைக்கேட்ட பிராட்டியார் மனக்கலக்கமுற்று ''இந்த கங்கையில் இப்பொழுதே உயிர் துறந்துவிடுவேன்; இராகவனுடைய வம்ஶநாஶஞ்செய்யலாகாதே; இஃதல்லாமலும் அப்பிரானுக்குப் பரதந்த்ரமான வஸ்துவை எவ்விடத்தி லிட்டுவைத்தாலும் கிடக்கவேண்டியது கடமையன்றோ' என்றருளிச்செய்தனள். இந்தப்பிரிவினல் பாரதந்த்ர்யம் வெளியாயிற்று.

மூன்றுவது பிரிவு வருமாறு – பெருமாள் அஶ்வமேதயாகம் செய்கிற காலத்தில் வால்மீகி பகவானுடைய கட்டளையினல் குசலவர்கள் இராமபிரான் ஸந்நிதியையடைந்து பெருந்திரள் மத்தியில் ஸ்ரீராமாயணத்தைக் கானத்தில் அமைத்துப்பாடினர்கள். அது பெருமாள் நெஞ்சை யுருக்கியது. இங்ஙனம் பாடியவர்கள் தம்முடைய திருக்குமாரர்களென்று தெரிந்து பிராட்டியினிடத்தில் திருவுள்ளஞ்சென்றது. அப்பொழுது ஒரு தூதனை யழைத்து ''நீ வால்மீகி

பகவான் ஆஶ்ரமத்திற்குச் சென்று மஹர்ஷியின் முன்னிலையில் பிராட்டியினிடத்தில் 'நாளைய தினமே இந்த மஹாகோஷ்டியில் வந்து தான் பரிஶுத்தமாயிருக்குமிருப்பை எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி ஆணைசெய்து தரல்வேண்டும்' என்று நாம் உரைத்ததாகச் சொல்லிவருவாய்'' என்று அனுப்பினர். தூதனும் சென்று தெரிவித்தான். பிராட்டியார் வால்மீகி பகவானை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹாஸபையில் பெருமாள் முன்னிலையில் வந்து ஒடுங்கி நின்றாள். அப்பொழுது வால்மீகி பகவான் இவள் ஶுத்தையென்பதை பலகாரணங்காட்டி எடுத்துரைத்தனர். அதனைக் கேட்ட பெருமாள் ''இவள் ஶுத்தையென்பதை யானுமறிவேன். மஹர்ஷி சொல்லியதாலும் ஒப்புக் கொள்ளத்தக்கதாம். ஆனாலும் லோகாபவாதம் நீங்கும் நிமித்தமாக இந்தக் கோஷ்டியில் ஆணைசெய்து தரவேண்டும்'' என்றனர். பிராட்டியார் கையும் அஞ்ஜலியுமாய்க் கவிழ்தலையிட்டுக்கொண்டு நின்று, ''பெருமாளையொழிய பிறரொருவரையும் மனம், வாக்கு, காயிகங்களால் அறியாதிருப்பது உண்மையானால் இந்தப் பூமிதேவி எனக்கிடந்தரவேண்டும்'' என்று ஶபதம் செய்த போது, பூமியினின்று ஓர் விமாநம் தோன்றியது. அந்த விமாநம் ஒப்புயர்வற்றதாயும், வியப்புறத்தக்கதாயும், திவ்யமாயும், வலிமையுடைய பாம்புகளின் தலைகளால் தாங்கப்பெற்றதாயும், திவ்யரத்நங்களால் அலங்கரிக்கப் பெற்றதாயும் விளங்கியது. அதிலிருந்த பூமிப்பிராட்டியார் ஸீதாப்பிராட்டியைத் தன்னிரு கைகளாலாரத் தழுவியெடுத்து ஆஸனத்திலிருத்தி எல்லாருங்காண தேவர்கள் புஷ்பவர்ஷம் வர்ஷிக்க, பாதாளத்தில் ப்ரவேஶித்தாள். இந்தப் பிரிவினால் அவனுக்கே உரிமை பூண்டிருக்கிற அநந்யார்ஹத்வத்தை வெளியிட்டாள்.

இதுவரையுங் கூறியதினால் புருஷகாரத்வம் பிராட்டிக்கேயுள்ள குணவிஶேஷமென்பதும், இந்த குணத்திற்கு க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்று மூன்று குணங்களும் அங்கங்களாகுமென்பதும், இந்த மூன்று குணங்களையும் ஸீதாப்பிராட்டியார் மூன்று பிரிவுகளால் வெளிப்படுத்தினாளென்பதும் குறிப்பிடப்பட்டன.

மேலும் ''ஈஶ்வரீம் ஸர்வபூ$_4$தாநாம்'' எல்லாருக்கும் பிராட்டியார் ஈஶ்வரியாய் விளங்குகிறாள் என்பதைக்கொண்டு பெரியபிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்று சிலர் கூறுவர். உபாயத்வமாவது – விரோதியைப் போக்கி இஷ்டங்களைக் கொடுப்பதாம்; இந்த உபாயத்வம் ஸர்வேஶ்வரன் ஒருவனுக்கே உளதென்பது தத்வமாகும். விஷ்ணுவின் ஒருசில குணஸாம்யம் பற்றி உலகத்தை ஆள்கின்ற அரசனையும் விஷ்ணுவென்று சொல்வதுபோல ஈஶ்வரனிடத்திற் சிபார்சுசெய்து கார்யத்தை முடித்துவைப்பவளாகிய இவளையும் ஈஶ்வரியாகச் சொல்வதுண்டு. இங்ஙனம் உரைத்தாலும் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் பிராட்டியாருக்குப் புருஷகாரத்வமே உளதெனல்

வேண்டும். ஜீவப்ரஹ்ம ஐக்யம் கூறுகிறவிடத்தில் மற்ற பேதஶ்ருதிகளிற் சொல்லியதற்கு ஏற்றவாறு ஜீவனை ஶரீரமாகக் கொண்டுள்ள ப்ரஹ்மமென்று எவ்வாறு பொருள்கொள்ள வேண்டுமோ அவ்வாறே எம்பெருமானுக்குப் பல விடங்களிலும் உபாயத்வமுண்டென்று சொல்லியதற்கேற்ப பெரியபிராட்டியா ருக்குப் புருஷகாரத்வமுண்டென்றே கொள்ளவேண்டும். உலகத்தில் சிறந்த உத்யோக பதவியிலிருப்பவனுடைய மனைவியின் சிபார்சால் ஒருகார்ய ஸித்தியைப் பெற்றவன், இந்தச் சீமாட்டியால் இக்காரியத்தைக் கொண்டேனென்று சொல்லுவான். இங்ஙனங் கூறினாலும், உத்யோகஸ்தன் உத்தரவு செய்யாத போது கார்யம் பார்க்கமுடியாது. இதனால் உத்தரவு கொடுக்குமியல்பு உத்யோகஸ்தனிடத்திலுள்ளதென்பதும், அவன் மனைவிக்குச் சிபார்சு செய்யுமியல்பே உள்ளதென்பதும் தெளிவாகக் காணலாம். இதனாலும் பிராட்டியாருக்கு புருஷகாரத்வமே உள்ளதென்று நிரூபிக்கலாயிற்று.

இந்த உபந்யாஸத்திற்குத் தலைமை வஹித்த அக்ராஸநர் ஸ்ரீபெரும்பூதூர் ந்யாயவேதாந்த வித்வான் ஸ்ரீ.உ.வே.ஆஸூரி ராமானுஜாசார்யஸ்வாமி முடிவுரையை கூறினர். அதன் சுருக்கம் பின்வருமாறு–

''வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார். இங்குப் பூமேலிருப்பவளாகிய பெரியபிராட்டியார் ப்ராப்தி விரோதியாகிய பாபங்களைப் போக்குவாள் என்றதனால் இஷ்டங்களையுங் கொடுப்பாளென்பதும் பெறப்பட்டது. விரோதியைப் போக்கி இஷ்டத்தைத் தருவதே உபாயவஸ்துவுக்குள்ள தர்மமாதலால் உபாயத்வம் பெரியபிராட்டி யாருக்குள்ளதென்பது தெளிவாயிற்று. ''தேவிமாராவார் திருமகள் பூமி ஏவமற்றமரராட் செய்வார்'' என்றதனால் பிராட்டியார் நித்யஸூரிகளையும் ஏவியடிமை கொள்கிறாள் என்பது விளங்கும். இதுவும் பிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்பதை வலியுறுத்தும். ஆகவே ஸர்வேஶ்வரன் உபாயபூதனையும் தலைவனையுமிருப்பதுபோலப் பிராட்டியாரும் உபாயபூதை யாயும், தலைவியாயும் இருக்கிறாளென்று சிலர் சொல்வார்கள். இங்ஙனம் சொல்லுவது பொருந்தாது.

நம்மாழ்வார் ''களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்று அருளிச்செய்தார். இங்கு எம்பெருமானை நோக்கி, உன்னை யடையவொட்டாது தடுக்கின்ற பாபங்களைப் போக்கினும், போக்குவாய்; போக்காதொழியினுமொழிவாய்; உன்னையொழிய வேறொரு ரக்ஷகன் எனக்கில்லை என்றார். இதனால் எம்பெருமான் ஒருவனுக்கே உபாயத்வமுண் டென்று விளங்குகிறது. முன்பு ''வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்று பிராட்டியாருக்கும் உபாயத்வம் அருளிச்செய்தது பொருந்துமோ வெனில் – ஒருகர்த்தாவால் அருளிச்செய்யப்பட்ட விஷயங்களில் ஒன்றுக் கொன்று விரோதப்படமாட்டாது. விரோதம் தோற்றுமாகில் விரோதப்படாத முறையை ஆராய்ந்து பொருளுரைக்கவேண்டும். ஶாஸ்த்ரத்தில் ''மா ஹிம்ஸ்யாத்

ஸர்வாபூ₄தாநி'' எல்லா ஜீவவர்க்கங்களுள் ஒன்றினையேனும் ஹிம்ஸைசெய்ய லாகாதென்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு விரோதமாக மற்ருேரிடத்தில் ''அக்நீஷோமீயம் பஶுமாலபே₄த'' என்று அக்நீஷோமீய யாகத்தில் பஶுவை ஹிம்ஸிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி ஒன்றுக்கொன்று விரோதங்கண்டவிடத்து இரண்டிற்கும் பொருத்தமாக ஸோமயாகத்தில் பஶுவை ஹிம்ஸை செய்வதொழிய மற்றவிடங்களில் ஒருயிரினையும் வதைசெய்யலாகாதென்று பொருள் கொள்வதுபோல, இங்கும் விரோதமில்லாத முறையை ஆராய்ந்து பொருள்காண வேண்டும்.

''பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்பதில் வினைதீர்க்குமென்று பொதுவாகக் கூறியிருப்பதால் சேதநன் பகவத் விஷயத்தை ஏறிட்டுப்பாராதிருக் கிற ஆரம்ப விரோதியான பாபத்தைப் போக்குகிருளென்று பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கொண்டால் ஒன்றுக்கொன்று பொருந்தாதிருந்த விரோதம் நீங்கிவிடும். இதனல் ''களைவாய் துன்பம் களையாதொழியாய் களைகண் மற்றிலேன்'' என்று ஸர்வேஶ்வரன் ஒருவனுக்கே உபாயத்வமுள்ளதென்று குறிப்பிட்டதற்கு விரோதமாக ''பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்'' என்பதை மேற்கொண்டு பிராட்டிக்கு உபாத்வமுள்ளதென்று நிலைநாட்ட முடியாதென்பது பெறப்பட்டது.

பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு எம்பெருமானை உபாயமாகப் பற்றிப் பரார்த்த கைங்கர்யஞ்செய்வதே இவ்வாத்மாவுக்குச் சிறந்த ப்ரயோஜநமாகும். பரார்த்த கைங்கர்யமாவது – தனக்கோர் ப்ரயோஜநத்தைச் சிறிதும் விரும்பாமல் எம்பெருமான் முகமகிழ்ச்சிக்கு ஏதுவாகிய பணிவிடைகளைச் செய்வதாம். இந்த ஆத்மாவுக்கு சிறந்த ப்ரயோஜநம் யாதாகும் என்று தீர்மானித் துரைக்க வந்தவிடத்தில் நம்மாழ்வார் ''தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே'' என்று அருளிச்செய்துள்ளார். மேலும் ''உன்தன்திருவுள்ளம் இடர்கெடுந் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்'' என்று அவனுடைய திருவுள்ளக் களிப்பே பரமப்ரயோஜநமாக அருளிச்செய்தார். சந்தனம், புஷ்மம், தாம்பூலம் முதலியன பிறர்க்கே உகப்பை யுண்டுபண்ணுவனவாயிருப்பனபோலச் சேதநனும் எம்பெருமானுக்கே மகிழ்ச்சியை விளைவிப்பவனுக இருக்க வேண்டும். சந்தனம், புஷ்பம் முதலியன அறிவற்ற பொருளாதலால் பிறரை மகிழ்விக்குமேயன்றி தாம் மகிழமாட்டா. ஆத்மா அறிவுடைப்பொருளாதலால் பிறரை மகிழ்வித்தலும், தான் மகிழ்தலுமாகிய இரண்டு தர்மங்களுண்டு. இந்த இரண்டு தர்மங்கள் ஆத்மாவுக்கிருப்பினும், பரதந்த்ரனுகிய இவனது மகிழ்ச்சியும் பரமசேதநனுகிய எம்பெருமானுடைய மகிழ்ச்சியைக்கண்டு ஏற்படுவதாயிருக் கும். ஆதலால் பரார்த்த கைங்கர்யத்துக்கு ஒரு குறையுமின்றென்க. ஆத்மாவுக்குப் பரார்த்த கைங்கர்யமே சிறந்த ப்ரயோஜநமாமென்பது இதனல் பெறப்பட்டது.

–நன்றி ஹரிஸமயதிவாகரம்

ஸ்ரீ:

## அந்திமஸ்ம்ருதி வேண்டா

## (ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி திருமாலிருஞ்சோலை ஜீயர்ஸ்வாமி)

அந்திமஸ்ம்ருதி வேண்டா என்ற வார்த்தை பேரருளாளப்பெருமாள் அருளிச் செய்த ஆறுவார்த்தைகளில் ஒன்றும்.

ஸ்ரீராமாநுஜர் திருவுள்ளத்தில் தோன்றின ஸம்ஶயங்களில் ஒன்றுக்கு உத்தரமாகப் பேரருளாளப்பெருமாள் ''அந்திமஸ்ம்ருதி வேண்டா'' என்று அருளிச்செய்தபடியால் அந்திமஸ்ம்ருதி வேண்டும் என்ற பக்ஷமும், வேண்டா என்ற பக்ஷமும் ஆக இரண்டு பக்ஷங்களும் இருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இனி இவற்றை யோஜிப்போம்.

''யம் யம் வாபி ஸ்மரந்ப$_4$ாவம் த்யஜத்யந்தே களேப$_3$ரம்।
தந்தமேவைதி கௌந்தேய ஸத$_3$ா தத்ப$_4$ாவப$_4$ாவித:''
''தஸ்மாத் ஸர்வேஷுகாலேஷு மாமநுஸ்மர''

இவை பகவத் வாக்யங்களாம். இவற்றின் பொருள் – யாதொரு சேதநன் தன் அந்திமகாலத்தில் எந்தெந்த விஷயத்தை நினைத்துக்கொண்டு ஶரீரத்தை விடுகிறானோ அதே விஷயத்தை அடுத்த ஜந்மத்தில் அடைகிறான். ஆகையால் ஸர்வகாலத்திலும் என்னையே அநுஸ்மரணம் செய்துவந்தால் அந்த அநுபவம் தன்னடைவே அந்திமகாலத்தில் வரும் என்பதாம். இதற்குத் த்ருஷ்டாந்தமாக ஜடபரத உபாக்யாநமும் அறியத்தக்கது. ஜடபரதர் தம் ஆஶ்ரமத்தில், கதியற்றுக் கிடந்த ஒரு குட்டிமானை எடுத்து மிகவும் ப்ரியமாக வளர்த்து வந்தார். பின் அவருடைய அந்திமதஶையில் மானை நினைத்துக்கொண்டே உயிர் துறந்தார். ஆதலால் அவர் மறு ஜந்மத்தில் மானாய்ப்பிறந்தார். இதனால் பகவத் வாக்யத்திற்குப் பொருத்தமாக ஒரு ஐதிஹ்யமும் கிடைத்தபடியால் அந்திமஸ்ம்ருதி யாவருக்கும் வேண்டுமென்றே தெரிகிறது. இது நிற்க.

''க்ருஷ்ணத்வதீ$_3$ய பத$_3$பங்கஜ பஞ்ஜராந்த
மத்$_3$யைவமே விஶது மாநஸ ராஜஹம்ஸ: ।
ப்ராண ப்ரயாண ஸமயே கபவாதபித்தை:
கண்ட$_2$ாவரோத$_4$ந விதௌ$_4$ ஸ்மரணம் குதஸ்தே॥

என்று முகுந்தமாலையில் சொல்லப்பட்டது. இதன் பொருள் ''ஹே க்ருஷ்ண! பிராணன் ஶரீரத்தைவிட்டுப் புறப்படுகிற தஶையில் கபவாத பித்தங்களால் நலிவுபடும்பொழுது உன்விஷயமான நினைவு ஏற்படுவது அஸாத்யமாதலால் உன் திருவடித்தாமரையாகிய கூட்டுக்குள் அடியேனுடைய மநஸாகிய ராஜஹம்ஸம் இப்பொழுதே ப்ரவேஶிக்கக்கடவது'' என்பதாம்.

துப்புடையாரையடைவதெல்லாம் சோர்விடத்துத்துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேன் ஆனைக்குநீயருள் செய்தமையால்

எய்ப்பென்னைவந்துநலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன் அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே என்று பெரியாழ்வாரும் (4–10–1) பணித்தார். இதனால் ஆழ்வார்கள் ஸர்வேஶ்வரனை நோக்கி, அந்திமஸ்ம்ருதி வேண்டுமென்று நீ கீதையில் கட்டளையிட்டபடி எங்களால் அந்திமகாலத்தில் உன்னை நினைக்கமுடியாது; அதற்காக இப்பொழுதே விண்ணப்பஞ்செய்து கொண்டோமென்று அருளியதனால் அந்திமஸ்ம்ருதி முக்யமன்றெனவும் விளங்குகிறது. இதனால் பகவத் வாக்யத்தை முக்யமாகக் கைக்கொள்வதா? ஆழ்வார் அருளிச்செயலை மேற்கொள்வதா? என்ற ஸம்ஶய முண்டாகலாம். இந்த ஸம்ஶயத்தின் தெளிவுண்டாவது அரிதாயிருக்கும். ஏனெனில்? ஸர்வஜ்ஞனாயுள்ள ஸர்வேஶ்வரனுடைய வாக்யம் ஸாமாந்யமென்று தள்ளிவிட முடியாது. அருளிச்செயலென்றாலோ அதுவும்,

''மெய்ம்மைசொல்லில்வெண்சங்கமேந்திய கண்ணா! நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின்பொருள்தானே'' (பெரிய திரு 7–10–10) என்றபடி ஸர்வேஶ்வரனும் கைக்கொள்ளத் தக்க பெருமைவாய்ந்த அர்த்த விஶேஷம் அடங்கியதாதலால் தள்ளிவிட முடியாது. ஆகையால் ஸர்வஜ்ஞராயுள்ள உடையவருக்கும் இந்த நிலைமை பற்றியே ஸம்ஶயந்தோன்றியது. அதில் தெளிவுண்டாகும்படி பேரருளாளப்பெருமாள் ப்ரபந்நாதிகாரிக்கு ''அந்திம ஸ்ம்ருதிவேண்டா'' என்று அருளிச்செய்தார். இதனால் ஏனைய யோகிகளுக்கு அது அவஶ்யமாய் வேண்டுமென்பது தானே பெறப்படுகிறது. இவ்விஷயத்தை ஆழ்வாரும், ''தாம்போகும்போது உன்மத்தர்போல் பித்தேயேறி அநுராகம்பொழியும்போது எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்குள்ளம் கூடிற்றாகில் நல்லுறைப்பே'' (திருவாய் 8–8–8) என்றும் ''இறுகலிறப்பென்னும் ஞானிக்குமப்பயனில்லையேல் சிறுகநினைவதோர்பாசமுண்டாம்பின்னும்வீடில்லை மறுகலிலீசனைப்பற்றிவிடாவிடில்'' (திருவாய் 4–1–10) என்றும் அருளிச் செய்தார். ப்ரபந்நாதிகாரி தம் பரங்களெல்லாம் ஈஶ்வராதீநம் என்ற கொள்கையை மேற்கொண்டவனாதலால் ஸர்வேஶ்வரன் இவனது கடமையெல்லாம் தானே செய்துகொள்ளுகிறான். இவ்விஷயம் ஸ்ரீவராஹசரம ஶ்லோகத்தில்

ஸ்தி$_2$தே மநஸி ஸுஸ்வஸ்தே$_2$ ஶரீரே ஸதி யோ நர:
த$_4$ாதுஸாம்யே ஸ்தி$_2$தே ஸ்மர்த்தா விஶ்வரூபஞ்ச மாமஜம்।
ததஸ்தம் ம்ரியமாணம்து காஷ்ட$_2$பாஷாண ஸந்நிப$_4$ம்
அஹம் ஸ்மராமி மத்ப$_4$க்தம் நயாமி பரமாம் க$_3$திம்॥

இதன்பொருள்:– எந்த ஒரு சேதநனும் தன்மனதும், ஶரீரமும் ஸுகமே இருக்க கபவாதபித்தங்களும் சரியான நிலைமையிலிருக்குங்கால் ஜகத்ரூபியாயும், பிறிப்பிலியாயுமிருக்கும் என்னை நினைத்து வைத்தால் அவன், முன் சொல்லப்பட்டவைகளால் பாதிக்கப்பட்டு தன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குத்

தான் ஶக்தனின்றிக்கே கல் புல்களைப்போல் அசித்வத்பரதந்த்ரனாய் மரணத்தையடையக்கூடிய தசையில், அவன் என்னை நினையாவிட்டாலும், முன் என்னை நினைத்துக்கொண்டு என் பக்தகோடி ப்ரவிஷ்டனான அவனை நானே ஸ்மரித்து எல்லாவற்றிலும் உயர்ந்த கதியை அடைவிப்பேன் என்பதாம். இது பகவத்வாக்யம். ஆக ப்ரபந்நாதிகாரியின் காரியமெல்லாம் ஈஶ்வரனே செய்து தலைக்கட்டகிறானென்பது பெறப்படும். இந்த அதிகாரிக்கு அந்திமஸ்ம்ருதி வேண்டா என்று இதனால் நிரூபிக்கலாயிற்று.

---

## திருக்கச்சிநம்பி வைபவம்

தேவராஜத₃யாபாத்ரம் ஶ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்।
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே₃ஹம் ஸஜ்ஜநாஶ்ரயம்॥

(ஶ்ரீவரதராஜனின் கருணைக்கு இருப்பிடமாய், மிகச்சிறந்தவராய், ராமாநுஜமுனிக்கும் மதிக்கத்தக்கவராய், நல்லோர்கள் சென்று சேருமிடமான திருக்கச்சிநம்பியை வணங்குகிறேன்.)

மயிலைக்கு மேற்கேயும், காஞ்சிக்குக் கிழக்கேயும்உள்ள பூவிருந்தவல்லியில் வீரராகவருக்கும், கமலைக்கும் நான்காவது குமாரராய் ஸௌம்ய வருஷம் (கிபி1009) மாசி மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் ''கஜேந்த்ரதாஸர்'' என்னும் திருநாமம் உள்ள திருக்கச்சிநம்பி அவதரித்தார். தாம் கைங்கர்யம் செய்துவந்த பார்க்கவரான திருமழிசையாழ்வாருடைய அருளாலே பிறந்தமையாலே, தந்தையார் இவருக்கு பார்க்கவப்ரியர் என்றும் பெயரிட்டார். திருக்கச்சிநம்பிகள் ஆளவந்தாருடைய ஶிஷ்யராவார். அவரளித்த திருநாமம் 'பேரருளாள தாஸர்' என்பது. கச்சியில் வாழ்ந்தமையால் திருக்கச்சிநம்பி, காஞ்சீமுனி, காஞ்சீபூர்ணர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் காஞ்சி வரதராஜப்பெருமாளுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்துகொண்டிருந்தவர். அப்பெருமாள் அர்ச்சாஸமாதியைக் கடந்து இவரோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார் என்பது ப்ரஸித்தம். அந்திமகாலத்தில் மோக்ஷம் விரும்பிய நம்பிக்கு ''நீர் விசிறி வீசினீர்; நான் பேசினேன். இரண்டுக்கும் சரியாயிற்று; ஓர் பரமபாகவதரின் அபிமானத்தைப் பெற்றாலே உமக்கு மோக்ஷம்'' என்று வரதன் கூறிவிட்டார்; அதற்குப் பின் மாறுவேஷத்துடன் திருக்கோட்டியூர்நம்பியிடம் மாடுமேய்க்கும் கைங்கர்யம் செய்து, ''நம்பையல்'' என்று அவரால் அபிமானிக்கப்பெற்று, அவ்வபிமானமே காரணமாக வரதனிடம் மோக்ஷம்பெற்றார் திருக்கச்சிநம்பிகள் — என்று வரலாறு கூறுகிறது. ஶ்ரீராமாநுஜர் இவரிடம் ஶிஷ்யராக ஆஶ்ரயிக்க ஆசைப்பட்டார். நம்பி மறுத்துவிட்டார். இவர் உண்ட கலத்திலே உண்ணவேணும் என்று ஆசைப்பட்டார் ராமாநுஜர். அதை ஶ்ரீராமானுஜருடைய பார்யை நிறைவேறாமல் செய்துவிட்டாள். தேவப்பெருமாளிடமிருந்து ஶ்ரீராமாநுஜருக்கு ஆறு வார்த்தைகளைப் பெற்றுக்கொடுத்து தர்ஶநார்த்தங்களை உறுதிப்படுத்திய மஹாநுபாவர் இவரே. தேவப்பெருமாளைப் பற்றிய எட்டு ஶ்லோகங்கள் கொண்ட ''தேவராஜாஷ்டகம்'' என்னும் துதிநூல் இவர் அருளிச்செய்தது.

—ஸுதர்ஶநர் ஶ்ரீ.உ.வே.க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி

ஸ்ரீ:

# மொழியைக்கடக்கும் பெரும்புகழான்

(ஸ்ரீ.உ.வே.டாக்டர் M.S.வேங்கடாசார்யஸ்வாமி, காட்டுமன்னார்கோவில்)

நம்பெருமாள் ''எம்பெருமானார் தரிசனம்'' என்று பேரிட்டு நாட்டிவைத்த வைணவசமயத்தில் எம்பெருமானாரின் அணுக்கச்சீடரான கூரத்தாழ்வான் பெறும் இடம் போற்றுதற்குரியது. இராமாநுசர் புகழ்பாடும் 'இராமானுசநூற்றந்தாதி'யில் திருவரங்கத்தமுதனார், ''மொழியைக்கடக்கும் பெரும்புகழான்'' என்று கூரத்தாழ்வானைப் போற்றியுள்ளார். மன்னுபுகழ்சேர் மணவாள மாமுனிகள் தம் யதிராஜ விம்ஶதியில், ''வாசாமகோ$_3$சர மஹாகு$_3$ண தே$_3$ஶிகாக்$_3$ர்ய– கூராதி$_4$நாத$_2$'' (ஶ்லோகம் 14) என்று கூரத்தாழ்வானைப் போற்றியுள்ளார். கூரத்தாழ்வான் பெருமை ''குருபரம்பராப்ரபாவ''நூல்களிலும், பூர்வாசார்யவ்யாக்யாந க்ரந்தங்களிலும், ''வார்த்தாமாலை''யிலும் மற்றும் பலநூல்களிலும் பேசப்பெறுகிறது. பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள பேருரைகளில் இடம்பெறும் ஐதிஹ்யம் ஸம்வாதம் நிர்வாஹம் முதலியவை வழிநின்று கூரத்தாழ்வான் பெருமையைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகிறது. ஆழ்வான் பெருமை வ்யாக்யாநங்களில் சுமார் ஐம்பது இடங்களில் பேசப்பெறுகிறது. சில முக்யமானவை மட்டும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பெறவுள்ளன.

## மாயன் மணிவண்ணன் தாள்பணியும் மகன்—ஆழ்வான்

பெரியாழ்வார்திருமொழியில், ''தொடர்சங்கிலிகை'' என்று தொங்கும் திருமொழியின் இறுதிப்பாசுரம், ''ஆயர்குலத்தினில்'' என்று தொடங்கி ''மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மக்களைப் பெறுவர்களே'' (1—7—11) என்று பலச்ருதி கூறுகிறது. இப்பகுதிக்குத் திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேஶத்தில் இடம்பெறும் செய்தி வருமாறு:—

''(மக்களைப்பெறுவர்களே) ...கூரத்து ஆழ்வார், நங்கையார் திருவடிச்சார்ந்த வாறே, பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டு அது கூடுகிற அளவில், தம்முடைய புத்ரரான ஆழ்வானுடைய ஸ்ரீவைஷ்ணவத்தைக்கண்டு 'இதினுடைய எடுப்பு இருந்தமை கண்டோமுக்கு, ஆழ்வானுக்கு அந்யஶேஷத்வம் வரவொண்ணாது' என்று ஆவர்த்திக்கை தவிர்ந்தாரிறே'' (திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேஶம்.1—7—11) (நங்கையார்—கூரத்தாழ்வானின் தாயார், ஆவர்த்தித்தல்—மறுமணம் செய்துகொள்ளல்)

கூரத்தாழ்வான் திருத்தாயார் (கூரத்தாழ்வாரின் மனைவி) மகன் ஆழ்வான் சிறுபிள்ளையாக இருக்கும்போதே திருநாட்டை அலங்கரித்தார். கூரத்து ஆழ்வார் ஶாஸ்த்ரவிதிப்படி இரண்டாம் திருமணம் செய்து கொள்ள விழைந்து, அது கை கூடும் நிலையில், கூரத்தாழ்வான் ''மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மகன்''

என்னும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கு இலக்கணமாக எழுந்தருளியிருக்க, ஆழ்வானுக்கு அந்யஶேஷத்வம் (மாற்ருந்தாய்க்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை) வரக்கூடாது என்று தம் திருமணத்தைத் தவிர்ந்தார் என்று கூறப்படுகிறது. இதனால், ஆழ்வான் துளசிஇலை, முதல்இலை முதலாகவே துளசியின் தன்மையுடன் இருப்பதுபோல பிறந்ததுவே முதலாக ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயுடன் விளங்கினார் என்று தெரிகிறது. பெரியாழ்வார் ''பாயசீருடைப் பண்புடைப் பாலகன் மாயன்'' என்று கண்ணனைப் போற்றினார். (பெரியாழ் திரு 1—1—7). அம்மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மகனாகக் கூரத்தாழ்வான் உரையாசிரியரால் காட்டப்பெற்றார். கூரத்தாழ்வானின் க்ருஷ்ணபக்தி மிக உன்னதமானது. ''பிறந்தவாறும்'' என்னும் பாசுரத்தை அநுஸந்தித்து மோஹித்துக் கிடந்தார் என்னும் ஐதிஹ்யமும் உண்டு. கூரத்தாழ்வார் மறுமணம் தவிர்ந்த செய்தி திருவாய்மொழி 5—5—1 பாசுரவிளக்கத்தில் ஈடு வ்யாக்யாநத்திலும் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வருமாறு:—

''அன்னைமீர்காள்...கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிச்சார்ந்தவாறே இன்னுமொரு விவாஹம் பண்ணுவோமா என்று விசாரித்து, 'இது தான் க்ரமத்தாலே வந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும் இனித்தான், 'அநாஶ்ரமீ ந திஷ்டே$_2$த்' என்று ஶாஸ்த்ரம் சொல்லாநின்றது. இஶ்ஶாஸ்த்ரத்தை அநுஷ்டிப்போமா, பாகவத பரிசர்யை பண்ணுவோமா என்று விமர்ஶியா 'அஸ்ஸாமாந்ய த$_4$ர்மத்திற் காட்டில், இவ்விஶேஷத$_4$ர்மமே ப்ரப$_3$லம்' என்று தவிர்ந்தார். (திருவாய் 5—5—1 ஈடு)

இப்பகுதியில் மநுதர்மஶாஸ்த்ரத்தில் இடம்பெறும் ஶ்லோகம்

''ப்$_3$ரஹ்மசாரி க்$_3$ருஹஸ்தோ வா வாநப்ரஸ்தே$_2$ாSத$_2$ பி$_4$க்ஷுக:।
அநாஶ்ரமீ ந திஷ்டே$_2$த்து தி$_3$நமேக மநாபதி''

என்னும் ஶ்லோகத்தில் உள்ளபடி, மனைவியை இழந்தவன் மீண்டும் மணம்புரிந்த க்ருஹஸ்தனாக இருக்கவேண்டும் அல்லது அடுத்த ஆஶ்ரமத்தைப் பின்பற்ற வேண்டும் என்னும் விதி சொல்லப்பட்டது. இது ஸாமாந்ய தர்மம். பாகவத பரிசர்யை விஶேஷதர்மம். அதைப் பின்பற்றவேண்டும் என்று, ஆழ்வானுக்குப் பரிசர்யை பண்ணுவதை உயர்ந்ததாகக் கொண்டு மறுமணம் தவிர்ந்தார். ''தனக்கென வாழாப் பிறர்க்கென வாழுநற்பெருநராக'' ஆழ்வான் தந்தையார் எழுந்தருளிமகிழ்ந்தார். இப்பகுதியில் தன்மகனை, ''பரமபாகவதனாக''த் தந்தை உகந்தார் என்னும் விஷயம் புலப்படுகிறது. ''ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே ! சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்னும் புறநானூற்றுத் தந்தையாக ஆழ்வார் திகழ்ந்தார். (சங்ககாலச் சமயம் வைணவம் அன்றோ).

## மறந்தும் புறந்தொழாமாந்தர் (செய்யாதன செய்யோம்)

திருப்பாவையில் பாவைநோன்பு மேற்கொண்டவர்களின் இயமநியமங்கள் அந்நூலின் இரண்டாம் பாசுரத்தில் கூறப்பெற்றுள்ளன. வையத்து வாழ்வீர்காள் என்று

தொடங்கும் பாடலில் ''செய்யாதன செய்யோம்'' என்னும் ப்ரதீகத்துக்கு அழகியமணவாளப்பெருமாள் நாயனுர் அமைத்த உரை வருமாறு—

(செய்யாதன செய்யோம்) ஆழ்வான், ''எங்கள் பூர்வர்கள் தே$_3$வதாந்தர ப$_4$ஜனம் பண்ணுமையாலே'' என்றுனும். (திருப்பாவை—2 ஆருயிரப்படி)

கூரத்தாழ்வானிடம் சிலர் சென்று நீங்கள் திருமாலே மட்டும் தொழுகிறீர்கள்; ஏன் பிறதெய்வங்களேத் தொழுவதில்லே'' என்று கேட்டனர். ஆழ்வான், ''எங்கள் பெரியோர் பிறதெய்வங்களேத் தொழார்'' அவர்கள் செய்யாதவற்றை நாங்களும் செய்வதில்லே, 'செய்யாதன செய்யோம்' '' என்ருர் — என்று கூறப்பட்டுள்ளது.

இதனுல் கூரத்தாழ்வான் தேவதாந்தரபஜநத்தில் ஈடுபடாதவர் என்றும், திருப்பாவையில் ஈடுபாடுடையவர் என்றும் நாம் அறிகிருேம். பிறதேவதைகளே நிந்தை செய்து பிறர் மனத்தைப் புண்படுத்தாது வாழ்ந்த மஹான் என்றும் தெரிகிறது.

### பாகவதர் பெருமையை ஆழ்வான் அருளிச்செய்தலும் அவர் நிஷ்டையும்

திருப்பாவை நோன்பு நோற்கும் பெண்களுக்கு உதவிசெய்ய வந்த வருணன், 'நான் உங்களுக்குச் செய்ய வேண்டியதென்ன' என்று பணிவுடன் கேட்க, 'ஆழிமழைக் கண்ணு' என்னும் பாசுரத்தில் பாவையர் வருணனுக்கு — ஆணேயிடுகிருர்கள். அவ்வாறு வருணன் கோபியரைக் கேட்கும் செய்திக்கு உவமையாகக் கீழ்க்காணும் செய்தி திருப்பாவை நாலாயிரப்படி பேருரையில் இடம்பெற்றுள்ளது.

''ஆழ்வானே ஒரு ப$_4$ட்டன், ''தே$_3$வதாந்தரங்களே நீங்கள் கண்டால் பண்ணும் ஆசாரமென்?'' என்று கேட்க, ''ஶாஸ்த்ர விருத்$_3$த$_4$மாகக் கேளாதே கொள்ளாய்; தே$_3$வதாந்தரங்கள் உங்களேக் கண்டால் பண்ணும் ஆசாரமென்? என்று கேளாய்'' என்ருர். இதனுல் பிறதேவதைகள் ஸ்ரீவைஷ்ணவர்களே அநுஸரித்து நடப்பர் என்பது ஆழ்வான் திருவுள்ளமாகிறது. விஷ்ணுதர்மம் மாங்கல்ய வ்ருத்தி ஸ்தோத்ரத்தில் ''த்$_3$ரவந்தி தை$_3$த்யா: ப்ரணமந்தி தே$_3$வதா:'' என்று ஹரியிடம் பக்தியுள்ள தேவதைகள் விஷ்ணுபக்தர்களிடம் அவ்வாறு நடந்துகொள்வர் என்பது கருத்து. கீழ்க்காணும் பாசுரங்களும் ஒப்பு நோக்கத்தக்கன:—

அவன் தமர் எவ்வினேயராகிலும் எங்கோன்
அவன் தமரே என்றெழிவதல்லால் — நமன்தமரால்
ஆராயப்பட்டு அறியார் கண்டீர் அரவணேமேல்
பேராயற்கு ஆட்பட்டார் பேர். (முதல் திருவ—55)

திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழாமாந்தர் — இறைஞ்சியும்
சாதுவராய் போதுமின்களென்ருன் நமனும்தன்
தூதுவரைக் கூவிச்செவிக்கு. (நான்முகன் திருவ—68)

மேற்கூறிய பாசுரங்களில் உள்ள செய்திகள் விஷ்ணுபுராணத்தில் உள்ளவை.

ஸ்ரீவேங்கடேச்வர ஸுப்ரபாதத்தில் இடம்பெறும்

''ஸூர்யேந்து$_3$பெ$_4$ளமபு$_3$த$_4$வாக்பதி காவ்யஸௌரி,
ஸ்வர்ப$_4$நுகேதுதி$_3$விஷத்$_3$ பரிஷத்ப்ரத$_4$நா:
த்வத்$_3$த$_3$ஸத$_3$ஸ சரமாவதித$_3$ஸத$_3$ஸா:
ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரப$_4$தம்'' என்னும் 18ம் ஶ்லோகம்

ஆழ்வான் திருவுள்ளப்படி அமைந்ததாகும்.

**கூரத்தாழ்வான் 'தயாநிதி' (ஸர்வபூத ஸுஹ்ருத்)**

எம்பெருமானுக்கு பலம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் ஆகிய குணங்கள் இருப்பினும் அவை 'தயை' என்னும் கல்யாணகுணத்திற்கு அடுத்த நிலையில் இருப்பவை என்று பெரியோர் கூறுவர்; இச்செய்தியை வேதாந்தாசாரியர்

''அநுசர ஶக்த்யாதி$_3$ கு$_3$ணும் அக்$_3$ரேஸர பே$_3$த$_4$ விரசிதாலோகாம்।
ஸ்வாதீ$_4$நவ்ருஷகி$_3$ரீஶாம் ஸ்வயம் ப்ரபூ$_4$தாம் ப்ரமாணயாமி த$_3$யாம்॥ (ஸ்ரீத$_3$யாஶதகம்–11)

என்கிறவிடத்தில் காட்டியுள்ளார். ஆழ்வான் ஸ்ரீவரதராஜஸ்தவத்தில்

ஸ்ரீநிதி$_4$ம் நிதி$_4$மபாரமர்த்தி$_2$நாம் அர்த்தி$_2$தார்த்த$_2$ பரித$_3$ந தீ$_3$க்ஷிதம்।
ஸர்வபூ$_4$த ஸுஹ்ருத$_3$ம் த$_3$யாநிதி$_4$ம் தே$_3$வராஜமதி$_4$ராஜம் ஆஶ்ரயே॥(வரதராஜ ஸ்த–2)

என்று தேவராஜனை ஸர்வபூதஸுக்ருத்தாக (அனைத்துயிரினங்களுக்கும் அன்பனாக)ப் பணித்தார். ''ஸர்வபூ$_4$தஸுஹ்ருத்'தாகத் தாமே இருந்தார்.

திருமாலை 41ம் பாடலில் (வானுளார் அறியலாகா) உள்ள 'ஏலும்' என்னும் பகுதிக்கு விளக்கம் தரும்பொழுது, உரையாசிரியர் கீழ்க்காணும் செய்தியைத் தந்துள்ளார்;—

''**ஏலும்...** ஸர்ப்பாஸ்யத்திலேயகப்பட்ட மண்டூ$_3$கத்தினுடைய ஆர்த்தியைக் கேட்டு, இது ஆர் அறிந்து விடுவிக்கக்கூப்பிடுகிறது? என்று ஆழ்வான் மோஹித்தான்

தவளையொன்றைப் பாம்பு விழுங்கத் தொடங்கியபொழுது, தவளை கூக்குரலிட்டது. அக்குரலைக் கேட்ட பரமகாருணிகரான ஆழ்வான் ''ஐயோ! இந்தத் தவளை, தன்னைப் பாம்பின் வாயிலிருந்து யார் விடுவிக்கப் போகிறார் என்று கூக்குரலிடுகிறது'' என்று அத்தவளையின் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி மயங்கி விழுந்தார். இதனால் ஆழ்வான் ''ஸர்வபூதஸுஹ்ருத்'' என்று தெரிகிறது.

**கூரத்தாழ்வான் பொறுமையின் எல்லைநிலம்**

உலகத்தில் பிறந்தவர் ஏதேனும் ஒருநிலையில் பிறர்க்குத் தீங்கிழைக்கநேரிடும்; அவ்வாறு செய்யும் பொழுது தீங்கினை எதிர்கொள்பவர் பொறுமையுடன் நடந்து கொள்ளவேண்டும். பொறுமையின் பெருமையை வால்மீகிபகவான்,

''க்ஷமா த$_3$நம் க்ஷமா ஸத்யம் க்ஷமா யஜ்ஞஶ்ச புத்ரிகா:।
க்ஷமாயஶ: க்ஷமா த$_4$ர்ம: க்ஷமாயாம் விஷ்டிதம் ஜக$_3$த்॥'' (ரா.பா.33–9)

என்றருளிச்செய்துள்ளார். பகவான் ஸ்ரீராமனே ''க்ஷமயா ப்ருதி$_2$வீ ஸம:'' என்றும் அவர் அருளியுள்ளார். ஆழ்வானும் அத்தகைய கல்யாணகுணத்தைக் கொண்டிருந்தார் என்று நம் ஆசிரியர் நஞ்ஜீயர் அருளிச்செய்துள்ளார். அச்செய்தி வருமாறு:—

''நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்''...கூரத்தாழ்வானும், ஆண்டாளும், பிராட்டியும் போல்வார்'' (கண்ணி 4 நஞ்சீயர் வ்யாக்யானம்)

நன்மையால் மிக்க நான்மறையாளரில் முதலிடம் ஆழ்வானுக்கும், அடுத்த இடம் அவர் தேவிகளுக்கும், அடுத்தஇடம் ஸீதாப்பிராட்டிக்கும் அளிக்கப்பெற்றுள் ளமை நோக்கத்தக்கது. தன் கண்கள் போகக் காரணமானவருக்கு உதவ ஸ்ரீவரதராஜனிடம், 'நான் பெற்ற பேறு நாலூரான் பெறவேணும்' என்று ப்ரார்த்தித்தார். அவர் தேவிகள், அகளங்கநாட்டாழ்வான் தன் பிழைக்குப் பரிகாரம் தேடாமல் இறந்தான் என்று வருந்தினுள். ஸீதை அஶோகவநத்தில் தன்னைத் துன்புறுத்திய அரக்கிகளை மன்னித்து அநுமனிடமிருந்து காத்தாள். இதனுல் ஆழ்வான் பொறுமையின் எல்லைநிலம் என்றும் மன்னிக்கும் கல்யாணகுணம் உடையவர் என்றும் அறியலாம்.

### தீக்குறளை சென்ருேதோம் என்னும் நிஷ்டை

உலகத்தில் பிறந்தவர் தம்மை உயர்வாகவும் பிறரைத் தாழ்வாகவும் மதிப்பிடும் நிலை பொதுவாக உள்ளதாகும். ''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்ருர் வள்ளுவர். ஏதேனும் பிறரைப் பற்றிக்கூறித் திரிதல் உலகில் பலஇடங்களில் காணப்படும் நிகழ்வாகும்.

ஆழ்வான் பிறரைக்குறை கூருதவர். அதுமட்டுமின்றி பிறர்குறை கூறித்திரிபவரையும் திருத்திப்பணிகொள்ளும் பண்புடையவர் என்று பேருரைகள் மூலம் அறியலாம்.

திருவாய்மொழி ஈடு வ்யாக்யானத்தில் 3—5—7 பாடலுக்கு உரை வரைந்த ஆசிரியர் ''(**உத்தமர்கட்கு என் செய்வாரே**)....சிலர் அங்கே வந்து ஆழ்வானைக் கண்டு ''ஒருவனுண்டிறே'' என்று போகப்புக, **ஒருவரையும் ஒருகுறை சொல்லியறியாதவன்**'' என்று ஆழ்வானைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆண்டாள், நோன்புக்காலத்தில் பின்பற்றவேண்டும் என்று அருளிச்செய்ததை வாழ்நாள்முழுதும் கடைப்பிடித்த ஆழ்வான் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

ஆழ்வான் சீடரான பிள்ளைப்பிள்ளையாழ்வான், முதலில் பாகவததூஷணை செய்து வந்தார். அவரைத் திருத்திப் பணிகொள்ள அவரிடம் ''அடியார்களிடம் திரிகரணத்தாலும் அபசாரப்படுவதில்லை'' என்று 'வாக்தாநம்' வாங்கி அவரைத் திருத்திப்பணிகொண்டார். திருமாலை 43ஆம் பாடலுக்கு அமைந்த உரையில் இச்செய்தி கூறப்பெற்றுள்ளது. அதுவருமாறு:—

(**தாம்புலையர்**......பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆத்மஹிதம் சொன்ன ஸமநந்தரத்திலே ஆழ்வான் பணித்த வார்த்தையை ஸ்மரிப்பது. திருமாலடியார்களைப் பழிப்பவர் புலையர்

என்பது ஆழ்வான் திருவுள்ளமாகும்.

**தானே ஆசாரியனாகவும் ஶிஷ்யனாகவும் இருந்த அடக்ககுணம்.**

உலகத்தில் மேன்மையான ஆசிரியராக இருக்க விரும்பும் நிலையே பெரும்பாலும் காணப்பெறும்; பிறருக்கு உபதேசம் செய்வது என்பது எல்லாரும் விரும்பும் செயலாகும். தம் சீடனை ஆசாரியராகக் காட்டித் தாம் சீடனாக நடந்துகாட்டிய பெருமை பேராசானாக விளங்கிய ஆழ்வானுக்கு மட்டுமே உள்ள பெருமையாகும். இச்செய்தி பெரியதிருமொழிப்பாடல் (7–5–2)உரையில் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வருமாறு:– ''தேரில்பாகனாயூர்ந்த'' ஆழ்வானுக்கு மூலம் வாசித்துப்போந்தார் சிலரிலே, ஒருவருக்கு க்$_3$ரந்த$_2$ம் பார்க்கவேண்டி, ஆழ்வானோடே திருமுடிக்குறையிலேயிருந்து பாராநிற்கச்செய்தே அரையன் வந்தானாய், அவ்வளவிலே அவன்கையிலே க்$_3$ரந்த$_2$த்தை ஆழ்வான் தான் வாங்கிப்படித்துக் கொண்டிருந்தானாம்''

இப்பாடல் திருவழுந்தூர் திவ்யதேஶமங்களாஶாஸநத்தில் இடம்பெறுகிறது.

''பாரித்தெழுந்த படைமன்னர் தம்மைமாள பாரதத்துத்
தேரில் பாகனாயூர்ந்த தேவதேவன் ஊர்போலும்'' (பெரிய திரு 7–5–2)

என்னும் பகுதியில் கண்ணன் (பரம்பொருள்) தன்னைத் தேரோட்டியாகத் தாழவிட்டுக் கொண்ட செய்தி கூறப்பெற்றுள்ளது. கண்ணனைப்போல் தம்மைத் தாழவிட்டுக் கொண்ட மஹாசார்யரான கூரத்தாழ்வான் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பெரியவாச்சான்பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.

கூரத்தாழ்வான் நாள்தோறும் காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுது அவரிடம் மூலநூல் பாடம் கேட்டுவந்த ஒருவருக்கு ஆழ்வானிடம் மேலும் விளக்கம் கேட்க வேண்டும் என்னும் அவா எழுந்தது; ஆயினும் அவர் தம்மை மிகவும் உயர்ந்தவராக எண்ணிக்கொண்டமையால் மறைவிடத்தில் பாடம் கேட்க விழைந்தார். திருவரங்கத்தில் மறைவிடத்தில் யாரும் அறியாதபடி பாடம்கேட்டு வந்தார். திடீரென்று அரையன் (அரசன் அல்லது திருகோயில் அரையர்) அங்குவந்துவிடவே, ஆழ்வான் தம்மிடம் பாடம் கேட்பவர் கையிலிருந்து மூலபாடபுத்தகத்தைத் தம்கையில் வாங்கிக் கொண்டார். பாடம் கேட்டவரை ஆசிரியராகவும், தாம் பாடம் கேட்பவர் போலவும் பிறர் நினைக்கும்படி நடந்து கொண்டார். தம்மிடம் பாடம் கேட்டவர் மனம் மகிழும்படித் தம்மைத் தாழவிட்டுக்கொண்ட பெருமையை (ஸௌலப்யம்) உரையாசிரியர் கருத்தில் கொண்டு, கண்ணபிரான் (பரம்பொருள்) பார்த்தனுக்குச் சாரதியாய் வந்த நிலையுடன் ஒப்பிட்டு மகிழ்கிறார்.

இந்த நிகழ்ச்சியைப் போன்றதொரு நிகழ்ச்சி வேறு எங்கும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. பாடம் சொல்வோர் மாணாக்கனின் உணர்வுகளுக்கும் மதிப்புத் தரவேண்டும் என்னும் போதனாமுறை (Teaching Methodology) ஆழ்வான் மூலம் வைணவஉலகு அறிந்தது.

தற்கால ஆசிரியர்களும் மாணவர்களை மதித்து நடக்க நன்மை விளையும் என்று கூறலாம்.

## ஆழ்வார் அருளிச்செயல்களில் ஆழ்ந்த ஈடுபாடு (பாவநாப்ரகர்ஷம்)

எம்பெருமான் திவ்ய சரிதங்களைக்கேட்ட மாத்திரத்தில் மோஹித்து விழுபவர் உளர் என்பதைக் காட்டும் ஐதிஹ்யங்கள் உரைகளில் இடம்பெற்றுள்ளன.

திருவிருத்தம் 98ஆம் பாடலுக்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிய உரையில் கீழ்க்காணும் செய்தி இடம்பெற்றுள்ளது.

''அரையனுக்குப் போகிற பாலை ஓர்இடையன் களவு கண்டான் என்று கட்டி அடியாநிற்கப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் கண்டு பரவஶராயிருந்து, 'இத்தால் வந்ததுக்கெல்லாம் நான் கடவன் என்று விடுவித்துக்கொண்டாராம்.''

எம்பெருமான் வெண்ணெயைக் களவு கண்டு அமுதுசெய்தான் என்பது நெஞ்சால் நினைக்கவும் அரிதாயிருக்கும். (நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும் ஈனச்சொல்லே) என்பது ஆழ்வார் திருவுள்ளம். அப்பாசுரத்தில் ஈடுபட்ட பிள்ளை உறங்காவில்லிதாஸர் அரசனுக்குரிய பாலைத் திருடிய இடையனைக் கண்ணனுகவே கண்டு அவன் குற்றத்தைத் தம் குற்றமாக ஏறிட்டுக் கொண்டு அவனை விடுவித்த செய்தி உரைப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

ஆழ்வான், பிள்ளைஉறங்காவில்லி தாஸரிடம் மிகுந்த மரியாதை உள்ளவர். ''ப₄க₃வத்கு₃ண ப்ரஸங்க₃த்திலே ஶிதிலராம்படி பிறந்த உம்முடைய ஜந்மமும் ஒரு ஜந்மமே'' என்று ஆழ்வான் பிள்ளைஉறங்காவில்லி தாஸரைக் கொண்டாடியசெய்தி உரையில் இடம்பெற்றுள்ளது. (திருவிருத்தம் 99 நம்பிள்ளை ஈடு) அப்பகுதியில் ''ஆழ்வான் வீராணத்தில் ஒருபெண்பிள்ளையைக் குடங்காலிட்டு, 'கள்வன்கொல் யானறியேன்' என்று சந்தையிட்டு, மேலடி தோற்றுமல் மோஹித்தாராம் என்றும் கூறப்பட்டுள்ளது.

கூரத்தாழ்வான் ''வீராணம்'' எனப்பெறும் வீரநாராயணபுரத்தில் (காட்டுமன்னார் கோயில்—ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீஆளவந்தார் அவதாரஸ்தலத்தில்) சிலகாலம் எழுந்தருளிப் பெரியதிருமொழி சந்தை சொல்லிவரும் நாளில் ஒருநாள் ஒரு பெண்பிள்ளையை மடியில் வைத்துக்கொண்டு (ஆழ்வான் பெண் என்றொரு கருத்தும் உண்டு. ஆழ்வானுக்குப் பெண்பிறந்ததாக வேறுநூல்களில் இல்லை. வல்லார் வாய்க் கேட்டுணர்க) சொல்லிவரும் பொழுது''கள்வன் கொல் யானறியேன் கரியான் ஒரு காளைவந்து'' (பெரிய திரு 3—7—1) என்னும் பாசுரம் சொல்லும்போது அப்பெண்பிள்ளையை அவள் கணவன் அழைத்துச் சென்றுவிட்டான். அப்போது அப்பாசுரப்பொருள் நெஞ்சில்ஓட அந்நிகழ்விறல் ஆழ்வான் மோஹித்து(மயங்கி)க் கிடந்தார்.

ஆழ்வான் திருவாய்மொழிக்குப் பொருளுரைக்கும்பொழுது நடந்த இத்தகைய

நிகழ்ச்சி பெரியவாச்சான்பிள்ளேயால் கூறப்பெற்றுள்ளது. அது வருமாறு:—

''கிடாம்பியாச்சான் ஆழ்வானேடே திருவாய்மொழி கேட்கிற நாளிலே ஒரு நாள் ஸ்ரீபாத₃த்திலே புகும்போதிலே தாழ்த்துப்புக, ''ஏன் நீ வைகினுயீ'' என்ன, 'ஆழ்வான் பாடே திருவாய்மொழி கேளாநின்றேன்' என்ருனுய், 'இன்று என்ன திருவாய்மொழி நிர்வஹித்தான்?'' என்று கேட்டருள, 'பிறந்தவாறு' என்ருனுய், 'அதிற்சொன்ன வார்த்தகளென்?' என்ன, ''நிர்வஹிப்பதாக ஆரம்பித்து இயல்சொல்லி அநந்தரம், ஆழ்வாருடைய பாரவஶ்யதையை அநுஸந்தித்து நெடும்போது கண்ணுங்கண்ணீருமாயிருந்து ''இவ்வாழ்வாரும் ஒருவரே! இவர்க்கு ஓடுகிற ப₄ாவவ்ருத்திக்கு நாமிருந்து பாசுரமிடுகையாவதென்? என்று 'இற்றைக்கு விடலாகாதோ' என்று விட்டான் என்ன, ''என்ன பரமசேதநனே'' என்றருளிச் செய்தாராம்.

இச்செய்தி கிடாம்பியாச்சான் ஸ்ரீஉடையவர் உரையாடலாக அமைந்துள்ளது. ஆழ்வான் அவருடைய ஆசாரியரான உரையவரால், 'என்ன பரமசேதநனே' என்று போற்றப்பெற்றுள்ளார்.

**ஆத்மகுணங்களேக் காட்டிலும் ஆசார்ய ஸம்பந்தமே உயர்ந்தது**

ஒரு சேதநனுக்கு ஆத்மகுணங்களும் இருக்கவேண்டும். ஆசார்ய ஸம்பந்தமும் இருக்கவேண்டும். ஆத்மகுணங்கள் ஆசார்யஸம்பந்தத்துக்கு இடையூருனுல் ஆசார்ய ஸம்பந்தத்திற்கு முன்னுரிமை தரவேண்டும் என்னும் கொள்கைளை ஆழ்வான் அநுஷ்டாநத்தில் காட்டித்தந்தார். இச்செய்திகுறித்த இரண்டு ஐதிஹ்யங்கள் வருமாறு:—

(உனக்கென்ன வேறுடையை) ''நீ ஒருவர்க்கும் விரோதியல்லே; நீ புக்குத் திருவடித்தொழு என்ன, ஆழ்வான் வார்த்தையை நினேப்பது'' (திருப்பாவை—15) —மூவாயிரப்படி

உடையவர் வெள்ளேசாத்தி எழுந்தருளின காலத்திலே, திருவடிகளில் ஸம்ப₃ந்த₄முடையாரை 'பெருமாளே திருவடித்தொழ விடவேண்டா' என்று விலக்க, ஆழ்வானே 'நீர் திருவடிதொழலாகாதோ' என்ன, 'ஆத்மகு₃ணம் மோக்ஷஹேது என்றிருந்தோம், அது ப₃ந்த₄ஹேதுவானபின்பு எம்பெருமானுர் திருவடிகளில் ஸம்ப₃ந்த₄த்தை அறுத்துக்கொள்ளவோ? என்று மீண்டு போந்தார்.
—கண்ணிநுண்சிறுத்தாம்பு பெரியவாச்சான்பிள்ளே வ்யாக்யானம்.

சோழஅரசன் ஒருவன் தீவிர சைவனுகி, வைணவமதத்துக்கு இடையூறு விளேவித்தகாலம்; அம்மன்னவன் ''சிவாத் பரதரம் நாஸ்தி' (சிவனுக்கு மேம்பட்ட தெய்வமில்லே) என்று எழுதிப் பெரியோர்களிடம் கையொப்பம் வாங்கினுன். அவன் இராமாநுசரிடம் கையொப்பம் பெறவிழைந்து அவரை அழைத்துவர இராமாநுசர் திருமடத்திற்கு சேவகர்களே அனுப்பினுன். (தொடரும்)

23. அக$_3$ணித கு$_3$ணவத்$_3$யம் ஸர்வம் ஸ்தி$_2$ரத்ரஸமப்ரதி
க்ரியமபிபய:பூரை: ஆப்யாயயந்த்யநுஜாக்$_3$ரதீ।
ப்ரவஹதி ஜகத்$_3$த$_4$ாத்ரீ பூ$_4$த்வேவ ரங்க$_3$பதேர்த$_3$யா
ஶிஶிரமது$_4$ராக$_3$ாத$_4$ா ஸா ந: புநாது மருத்$_3$வ்ருத$_4$ா॥

**விளக்கவுரை:–**தாயானவள் குழந்தையின் குணத்தையும் தோஷத்தையும் பாராமல் எப்படி முலைப்பால் கொடுக்கிறாளோ, பகவான் அடியார்களது குறை நிறைகளைக்கணிசியாது எப்படி கருணை புரிகிறானோ, அதுபோன்று காவிரி உலகுக்கெல்லாம் தாயாகி, எந்தவிதமான பிராயச்சித்தமும் செய்து கொள்ளத் தகுதியற்ற தாவரப்பொருள்களென்ன, ஜங்கமப்பொருள்களென்ன இவற்றின் குணத்தையும் தோஷத்தையும் ஆராயாமல் எந்நாளும் உறங்காது விழித்துக் கொண்டிருந்தே காற்றடிக்காலத்தில் இடையறாத வெள்ளப் பெருக்காலே அந்த தாவரஜங்கமங்களுக்கு அருள்புரிந்து வருகிறாள். அப்படிப்பட்ட குளிர்ந்த தாயும், இனிமைமிக்கதாயும், ஆழம்மிக்கதாயும் உள்ள காவிரி நம்மைப் பரிசுத்தப்படுத்துமாக.

24. தரளதநுதரங்கை$_3$: மந்த$_3$ம் ஆந்தோ$_3$ால்யமாந
ஸ்வதடவிடபிராஜீ மஞ்ஜரீ ஸுப்த ப்$_4$ருங்க$_3$ா।
க்ஷிபது கநகநாம்நீ நிம்நக$_3$ா நாரிகேள
க்ருமுகஜ மகரந்தை$_3$: மாம் ஸலாபா மத$_3$ம்ஹ:॥

**விளக்கவுரை:–** காவிரியின் கரையில் சோலைகள் பல உள்ளன. சஞ்சலமாயும், சிறியதாயுமிருக்கின்ற தன் அலைகளாலே சோலையிலே உள்ள மரங்களைக் காவிரி அலைக்கழித்து வருகிறது. அம்மரம் செடிகளிலுள்ள பூங்கொத்துக்களில் வண்டுகள் அயர்ந்து உறங்குகின்றன. கரையிலுள்ள தென்னை பாக்கு மரங்களிலிருந்து உதிர்ந்த மகரந்தப்பொடிகளால் நிறைந்த நீரை உடைய காவிரி நதியானது எனது பாபத்தைப் போக்கட்டும்.

25. மேல்இரண்டு ஶ்லோகங்களால் காவிரியின் இடைத்தீவாகிய சோலைசூழ்ந்த திருவரங்கத்தைப் பேசுகிறார்.

கத$_3$ளவகுளஜம்பூ$_3$பூக$_3$மாகந்த$_3$கண்ட$_2$
த்$_3$வயஸஸரஸநீராமந்தரா ஸஹ்யகந்யாம்।
ப்ரப$_3$ல ஜலபிபாஸா லம்ப$_3$மாநாம்பு$_3$தெ$_3$ளக$_4$
ப்$_4$ரமகரதருப்$_3$ருந்த$_3$ம் வந்த்$_3$யதாம் அந்தரீபம்॥

***விளக்கவுரை:–*** வாழைமரம், மகிழமரம், நாவல்மரம், பாக்குமரம், தேனினும் இனிய மாமரம், இவை அதிகமான தாகத்திஞலே சுவைமிக்க காவிரி நீரை கழுத்தளவு பருகி நிற்கின்றன. கரியநிறம்கொண்ட அச்சோலை கரையோரமாகத் தாழ்ந்து நிற்பதைப் பார்த்தால், தாகம் மிக்க மேகமானது தண்ணீர் பருகுகிறதோ என்னலாம் படியுள்ளது. அத்தகைய சோலையையுடைய திருவரங்கத்தை வணங்குவோமாக.

*26.* *யத்$_3$விஷ்ணோ: பத$_3$மதம: பரோ ரஜோக்$_3$ர்யம்*
*முக்தாநாம் அநுவிரஜம் விதீ$_3$ப்ரமாஹு:।*
*தத்புண்யம் புலிநமித$_3$ந்தயாத்$_3$ய மத்$_4$யே*
*காவேரி ஸ்பு$_2$ரதி ததீ$_3$க்ஷிஷீய நித்யம்॥*

***விளக்கவுரை:–*** விரஜாநதிக்கருகில் ரஜோகுணமோ, தமோகுணமோ இல்லாததாயும், மிகச்சிறந்ததாயும் உள்ள பரமபதமானது நித்யர்களுக்கும், முக்தர்களுக்குமே அநுபவிக்கத்தக்கதாக உள்ளதன்றே. அந்த புனிதமான பரமபதமானது இன்று இந்த ஸம்ஸாரமண்டலத்தில் எல்லார்கண்ணுக்கும் தெரியக்கூடியவகையில் விரஜாநதிபோன்ற காவிரியின் மத்தியில் மணற்குன்றில் விளங்குகின்றது. அத்தகைய இத்திருவரங்கமாகிய பரமபதத்தை இடையருது கண்டு கொண்டிருக்கக்கடவேன்.

*27.* *த்ரய்யந்தப்ரஹதிமதீஷு வைஷ்ணவாநாம்*
*ப்ராப்யாஸு ப்ரசுரப$_4$வஶ்ரமாபஹாஸு।*
*காவேரீபரிசரிதாஸு பாவநீஷு*
*ஸ்ரீரங்கே$_3$ாபவநதடீஷு வர்த்திஷீய॥*

***விளக்கவுரை:–*** ''வண்டினமுரலும் சோலை'' என்கிறபடி காவிரிக்கரையிலுள்ள புறச்சோலையை வருணிக்கிருர். பரமபதத்தில் ஸதா ஸாமகாநம் நடைபெறுவது போல இப்புறச்சோலையிலும் ஸம்ஸ்க்ருத, த்ராவிட வேத வேதாந்தங்கள் இடையருது ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ப்ரபலமான ஸம்ஸார தாபங்களைப் போக்குமவையாயும், பரிசுத்தங்களாயும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் புகலிடமாயும், காவிரி அலைகள்மோதப்பெற்றதாயுமுள்ள ஸ்ரீரங்கத்தின் சோலைகளில் வாழப்பெறுவேஞக.

ஆஸநமும், வாஹனமும் இவளுக்கும் ப்ராப்தம் என்று அருளிச்செய்கிறார்.

ஆக, இப்படிக் கீழ்ச்சொன்ன யுக்திகளாலே பிராட்டிக்கு நித்யவிபூ$_4$தி ஸம்ப$_3$ந்த$_4$ம் சொல்லப்பட்டது. இனி மேல் ஶ்லோகத்தாலே லீலாவிபூ$_4$தியோக$_3$மென்ன, தத$_3$ந்தர்வர்த்திகளாயிருந்துள்ள ப்$_3$ரஹ்மருத்$_3$ராதி$_3$ தே$_3$வக$_3$ணங்களுடைய ஶேஷத்வமென்ன இவை சொல்லப்படுகிறது. அதெங்ஙனேயென்றால்; (யவநிகா மாயா ஜக$_3$ந்மோஹிநீ) ''மாயாம் து ப்ரக்ருதிம் வித்$_3$யாந்மாயிநம் து மஹேஶ்வரம்'' என்றும், ''இந்த்$_3$ரோ மாயாபி$_4$: புருரூப ஈயதே'' என்றும், ''தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மாயா து$_3$ரத்யயா। மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே॥'' என்றும் இத்யாதி$_3$களாலே ப்ரதிபாதி$_3$க்கப்பட்டிருக்கிற ப$_4$க$_3$வந்மாயையன்றோ உனக்கு யவநிகை. ஒருதிரையின் உள்ளிருக்கும்

---

*எம்பெருமானுடைய ஆஸநமும், வாஹநமும் இவளுக்கும் அமைந்திருக்கிறது என்று அருளிச்செய்கிறார்.*

*ஆக, இதுவரையில் சொன்ன லோகந்யாயங்களாலே பிராட்டிக்கு நித்யவிபூ$_4$தியில் உள்ள பெருமை சொல்லப்பட்டது. இனி, இந்த ஶ்லோகத்தின் எஞ்சிய பகுதியாலே இவளுக்கு லீலாவிபூ$_4$தியோடு ஸம்ப$_3$ந்த$_4$மும், அதனுள்ளிருக்கும் பிரமன், உருத்திரன், முதலான தே$_3$வஸமூஹங்கள் அடிமைப்பட்டிருப்பதும் சொல்லப்படுகிறது. எப்படியென்னில்; (யவநிகா மாயா ஜக$_3$ந்மோஹிநீ)*

*மாயாந்து ப்ரக்ருதிம் வித்$_3$யாந் மாயிநந்து மஹேஶ்வரம் (ஶ்வேதா 4–10)*

*[ப்ரக்ருதியை, ஆஶ்சர்யமான ஸ்ருஷ்டிக்கு ஹேதுவாயிருப்பதால் மாயை என்றும், அந்த மாயையைத் தூண்டுபவனே மஹேஶ்வரன் என்றும் அறியக்கடவன்.]*

*இந்த்$_3$ரோ மாயாபி$_4$: புருரூப ஈயதே (ப்$_3$ருஹ 4–5–19)*

*[பரமைஶ்வர்யத்தை உடைத்தாயிருப்பதால் இந்த்$_3$ரன் எனப்படும் பரமாத்மா ப்ரக்ருதியாகிற மாயையினால் பல உருவங்களுடன் ஸஞ்சரிக்கிறான்.]*

*தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மாயா து$_3$ரத்யயா।*

*மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே॥ (கீ$_3$தை 7–14)*

*[தே$_3$வனாகிற என்னால் நிர்மிக்கப்பட்டதும், முக்கு$_3$ணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயை தாண்ட அரிதானது. என்னையே எவர்கள் ஶரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்] முதலான ப்ரமாணங்களாலே சொல்லப்பட்டிருப்பதால் எம்பெருமானுடைய சொத்தான மூலப்ரக்ருதியன்றோ உனக்கு முகத்திரையாயிருக்கிறது. உலகத்தில் முகத்திரையானது, அதை அணிந்து கொண்டிருப்பவர்கள் வெளியிலிருப்பவர்களைக்*

பேரைப் புறம்பிலவர் காணுதபடியாய், புறப்பட்டிருக்கும் பேரை உள்ளிருக்குமவர்கள் காணுதபடியாயிற்று இருப்பது. அங்ஙனிருக்கை யன்றிக்கே (ஜக$_3$ந்மோஹிநீ) என்று எம்பெருமானுக்குத் திரோத$_4$ாயிகையா யிருக்கையன்றிக்கே ஜக$_3$த்துக்குத் திரோத$_4$ாயிகையாயிருக்குமென்கிருர்.

(ப்$_3$ரஹ்மேஶாதி$_3$ஸுரவ்ரஜஸ் ஸத$_3$யிதஸ் த்வத்$_3$த$_3$ாஸத$_3$ாஸீக$_3$ண:) பூ$_4$லோகம் தொடங்கி ஸத்யலோகபர்யந்தமாக மேலுள்ள லோகங்களென்ன, அதல, விதல, ஸுதல, பாதாளளோத்தால, ரஸாதல, பே$_4$ாக$_3$வதீ பர்யந்தமான கீழேழு லோகங்களென்ன, இவற்றில் காணப்பட்டுடையராயிருந்துள்ள தே$_3$வக$_3$ணங்களென்ன, இவர்களுக்குக் கொத்து முதலிகளாயிருந்துள்ள ப்$_3$ரஹ்மருத்$_3$ராதி$_3$களென்ன, ஸரஸ்வதீருத்$_3$ராணீபுலோமஜா ப்ரப்$_4$ருதிகளாயிருந் துள்ள தே$_3$வஸ்த்ரீகளென்ன, அப்ஸரோக$_3$ணங்களென்ன, இவர்களெல்லாரும் ஆணடிமையும், பெண்ணடிமையுமாயிருக்கும் என்கிருர்.

'இவையெல்லாம் யத$_2$ார்த்த$_2$ம் என்றோ? ஸ்தோத்ரம் என்றோ? இது எங்ஙனே கூடும்படி?' என்ருல்: (ஸ்ரீரித்யேவ ச நாம தே) 'ஸ்ரீ:' என்றன்றோ உனக்குத் திருநாமம் என்கிருர். ''இத்தாலே இவளுக்கு ஸர்வஶேஷிணீத்வமும் தெரிவிக்கப்பட்டதோ?'' என்ருல் : ''ஸ்ரீஞ் –ஸேவாயாம்'' என்கிற த$_4$ாதுவாலே,

---

*காணமுடியாமல், வெளியிருப்பவர்கள் உள்ளிருப்பவர்களைக் காணமுடி யாதபடியன்றோ யிருப்பது. அப்படியல்லாமல் (ஜக$_3$ந்மோஹிநீ) என்கையாலே பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கு வெளியிருப்பவற்றை மறைக்காமல், வெளியிலிருக்கும் உலகத்திற்கு அவர்களை மறைப்பதாயன்றோயிருக்கிறது என்கிருர்.*

*(ப்$_3$ரஹ்மேஶாதி$_3$ஸுரவ்ரஜஸ் ஸத$_3$யிதஸ்த்வத்$_3$த$_3$ாஸத$_3$ாஸீக$_3$ண:) பூ$_4$லோகம் தொடங்கி ஸத்யலோகம் வரையிலுள்ள மேலுலகங்கள் ஏழும், அதல, விதல, ஸுதல, பாதாள, உத்தால, ரஸாதல பே$_4$ாக$_3$வதீ என்னும் கீழ் உலகங்கள் ஏழும், இவற்றில் காணப்படும் தே$_3$வஸமூஹங்களும், இவர்களை ஆள்பவர்களான பிரமன், உருத்திரன் முதலான தே$_3$வர்தலைவர்களும், அவர்களுடைய மனைவியரான ஸரஸ்வதீ, கௌரீ, இந்த்$_3$ராணீ முதலான தே$_3$வஸ்த்ரீகளும், அப்ஸரஸ்ஸுக்கள் கூட்டமும் ஆகிய இவர்கள் அனைவரும் ஆண்,பெண் வேலைக்காரர்களாய் இருப்பர் என்கிருர்.*

*முற்கூறிய பெருமைகள் அனைத்தும் உண்மையானதோ? அல்லது வெறும் துதியோ? இது எப்படி முடியும் என்ருல்; (ஸ்ரீரித்யேவ ச நாம தே) ''ஸ்ரீ:'' என்றன்றோ உனக்குத் திருநாமம் என்கிருர். ''இதனுல் இவள் அனைவராலும் கைங்கர்யம் செய்யப்படுமவள் என்று தேறுமோ'' எனில்; ''ஸ்ரீஞ் ஸேவாயாம்'' என்கிற த$_4$ாதுவாலே தன்னைத் தவிர்ந்த சேதநாசேதநங்கள்*

தன்னையொழிந்த சேதநாசேதநங்களாலே ஸ்வரூபஸ்தி$_2$திப்ரவ்ருத்திகளுக்காக ஆஶ்ரயிக்கப்படுகிறாள் என்று கொண்டு 'ஶ்ரீ:' என்கிறது. அதுக்கு ப்ரமாணம் ''ஈஶ்வரீம் ஸர்வபூ$_4$தாநாம்'' என்றும், ''அஸ்யேஶாநா ஜக$_3$த:'' என்றும் உண்டாகையாலே. (ப$_4$க$_3$வதி) ''துர்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபி$_4$ஜந லக்ஷணாம்'' என்கிறபடியே எம்பெருமானோடொக்க ஹேயப்ரதிப$_4$டமாயிருந்துள்ள கல்யாணகு$_3$ணைகதாநத்வம் சொல்லப்படுகிறது. ''மைத்ரேய ! ப$_4$க$_3$வச்ச$_2$ப்$_3$த$_3$ஸ் ஸர்வகாரணகாரணே । ஸம்ப$_4$ர்த்தேதி தத$_2$ா ப$_4$ர்த்தா ப$_4$காரோ Sர்த்த$_2$த்$_3$வயாந்வித: ।। நேதா க$_3$மயிதா ஸ்ரஷ்டா க$_3$காரார்த்த$_2$ஸ் தத$_2$ா முநே।।

---

*அனைத்தினாலும் தங்கள் ஸ்வரூபம் (ஸத்தை), ஸ்தி$_2$தி (வாழ்வு), ப்ரவ்ருத்தி (செயல்பாடு) ஆகியவை பெறுவதற்காக ஆஶ்ரயிக்கப்படுகிறாள் என்று தேறுமாகையாலே ஶ்ரீ: என்பது உனக்குத் திருநாமமாயிருக்கிறது என்கிறார். இவ்விஷயத்துக்கு*

*க$_3$ந்த$_4$த்$_3$வாராம் து$_3$ராத$_4$ர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம்।*
*ஈஶ்வரீம் ஸர்வபூ$_4$தாநாம் தாமிஹோபஹ்வயே ஶ்ரியம்।।(ஶ்ரீஸூக்தம்–9)*

*[கீர்த்தியைத் தருபவளும், (துஷ்டர்களால்) அடைய முடியாதவளும், எப்போதும் ஸம்ருத்$_3$தி$_4$யை உடையவளும், எல்லா ஸம்பத்துகளையும் உடையவளும், எல்லா பூ$_4$தங்களுக்கும் ஈஶ்வரியுமான ஶ்ரீதே$_3$வியை இங்கு அழைக்கிறேன்.] என்றும்,*

*''அஸ்யேஶாநா ஜக$_3$தோ விஷ்ணுபத்நீ '' (நீளாஸூக்தம், தை.ஸம் 4–4–12)*

*[இந்த உலகிற்கெல்லாம் ஸ்வாமிநியாகவும், விஷ்ணுவுக்குப் பத்னியாகவும் இருப்பவள்.] என்றும் வேத$_3$ங்களில் உள்ளதன்றோ. (ப$_4$க$_3$வதி)*

*துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபி$_4$ஜநலக்ஷணாம் ।*
*ராக$_4$வோSர்ஹதி வைதே$_3$ஹீம் தம் சேயமஸிதேக்ஷணா।।'' (ரா.ஸு.16–5)*

*[ஒரே வித$_4$மான கு$_3$ணங்கள், வயது, நடத்தை இவைகளை உடையவளும், ஸமானமான குலத்தையும், லக்ஷணங்களையும் உடையவளுமான வைதே$_3$ஹிக்கு ராக$_4$வனே தகுந்தவர். கறுத்தகண்களை உடைய இவளும் அவருக்கே தகுந்தவள்.] என்கிற ஶ்ரீராமாயண ஶ்லோகத்தின்படி எம்பெருமானைப் போலே இவள் தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாய், கல்யாண கு$_3$ணங்கள் அனைத்துக்கும் கொள்கலமாய் இருப்பவள் என்று இந்தத் திருநாமத்தால் சொல்லப்படுகிறது. மேலே வ்யாக்யானத்தில் எடுக்கப்பட்டுள்ள விஷ்ணுபுராண ஶ்லோகங்களில் [மைத்ரேயரே ! 'ப$_4$க$_3$வான்' என்னும் ஶப்$_3$த$_3$ம், ஸர்வகாரணங்களுக்கும் காரணபூ$_4$தனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் சொல்லப்படுகிறது. '(ப்ரக்ருதியை) கார்யத$_3$ஶையை அடையச் செய்பவன்', 'ஸ்வாமி' என்னும் இரண்டு*

ஐஶ்வர்யஸ்ய ஸமக்$_3$ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:। ஜ்ஞாநவைராக்$_3$யயோஶ் சைவ ஷண்ணாம் ப$_4$க$_3$ இதீரணா॥ வஸந்தி தத்ர பூ$_4$தாநி பூ$_4$தாத்மந்யகி$_2$லாத்மநி। ஸ ச பூ$_4$தேஷ்வஶேஷேஷு வகாரார்த்த$_2$ஸ் ததோऽவ்யய:॥ ஜ்ஞாநஶக்தி ப$_3$லைஶ்வர்ய வீர்யதேஜாம்ஸ்யஶேஷத:। ப$_4$க$_3$வச்ச$_2$ப்$_3$த$_3$வாச்யாநி விநா ஹேயைர்கு$_3$ணாதி$_3$பி$_4$:॥ ஏவமேஷ மஹா ஶப்$_3$தோ$_3$ மைத்ரேய! ப$_4$க$_3$வாநிதி। பரமப்$_3$ரஹ்மபூ$_4$தஸ்ய வாஸுதே$_3$வஸ்ய நாந்யக$_3$:॥ தத்ர பூஜ்யபதா$_3$ர்த்தோ$_2$க்தி பரிபா$_4$ஷாஸமந்வித:। ஶப்$_3$தோ$_3$ऽயம் நோபசாரேண த்வந்யத்ர ஹ்யுபசாரத:॥'' என்று கொண்டு ப்ரமாணமுண்டாகையாலே, ஶ்ரிய:பதியை நிர்தே$_3$ஶிக்கும் போது ''ப்ரதி$_3$ஶது ப$_4$க$_3$வாநஶேஷபும்ஸாம்'' என்றும்,

---

*அர்த்த$_2$ங்களுடன் கூடியது ப$_4$காரம்; முனிவரே! அப்படியே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன்' என்பது க$_3$காரத்தின் அர்த்த$_2$ம். ஸம்பூர்ணமான ஐஶ்வர்யம், வீர்யம், யஶஸ், செல்வம், ஜ்ஞானம், வைராக்$_3$யம் என்னும் இந்த ஆறு கு$_3$ணங்களுக்கும் 'ப$_4$க$_3$' என்னும் பத$_3$ம் வாசகமாயிருக்கிறது. பூ$_4$தங்களை ஶரீரமாகக்கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூ$_4$தங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூ$_4$தங்களிலும் வஸிக்கிறான். ஆகையால் அழிவற்றவனான ப$_4$க$_3$வான் வகாரத்துக்கு அர்த்த$_2$மாகிறான். கீழானவையான முக்கு$_3$ணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞாநம்' ஶக்தி, ப$_3$லம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லா கு$_3$ணங்களும், 'ப$_4$க$_3$வாந்' என்னும் ஶப்$_3$த$_3$த்தினால் சொல்லப்படுகின்றன. மைத்ரேயரே! இம்மாதிரியாக ப$_4$க$_3$வான் என்னும் இந்த மஹா ஶப்$_3$த$_3$ம் பரப்$_3$ரஹ்மமான வாஸுதே$_3$வனுக்கே உரித்தானது. வேறொருவரையும் குறிக்காது. 'பூஜிக்கத்தக்க பொருளைக் குறிப்பது' என்னும் பரிப$_4$ாஷையுடன் கூடிய இந்த ஶப்$_3$த$_3$ம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாக சொல்லப்படுவதில்லை. மற்ற விஷயங்களில் ஔபசாரிகமாகச் (அமுக்$_2$யமாக) சொல்லப்படுகிறது.] என்று சொல்லப்பட்டதன்றோ. திருவின்நாயகனைப் பற்றிச் சொல்லும்போது*

இதி விவித$_4$மஜஸ்ய யஸ்ய ரூபம் ப்ரக்ருதிபராத்மமயம் ஸநாதநஸ்ய।
ப்ரதி$_3$ஶது ப$_4$க$_3$வாநஶேஷபும்ஸாம் ஹரிரபஜந்மஜராதி$_3$காம் ஸ ஸித்$_3$தி$_4$ம்॥

*(வி.பு.6–8–64)* [பிறப்பற்றவனும், பழைமையானவனுமான எந்த விஷ்ணுவுக்குப் பலவிதமான ப்ரக்ருதியென்ன, (அதைக்காட்டிலும் மேலான) திவ்ய மங்களவிக்ரஹமென்ன, ஆத்மஸ்வரூபமென்ன, இவை இம்மாதிரியாக ஶரீரங்களாயிருக்கின்றனவோ, அந்த பகவான் ஹரி எல்லா மனிதர்களுக்கும், பிறப்பு, மூப்பு முதலியவைகளைப் போக்கடிக்கும் மோக்ஷஸித்$_3$தி$_4$யை அருளுவானாக] என்றும்,

ஸ்ரீதே$_3$வராஜகு$_3$ரு என்னும் எறும்பியப்பா அருளிய வரவரமுநி தி$_3$நசர்யா
(உரை– ந்யாய வேத$_3$ாந்த வித்$_3$வான்
ஸ்ரீ.உவே. தி.அ.க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, திருப்பதி)

19. **भृत्यैः प्रियहितैकाग्रैः प्रेमपूर्वमुपासितम् ।**
**तत्प्रार्थनानुसारेण संस्कारान् संविधाय मे ।।**

**ப்$_4$ருத்யை: ப்ரியஹிதைகாக்$_3$ரை: ப்ரேமபூர்வமுபாஸிதம்।**
**தத்ப்ரார்த்த$_2$நாநுஸாரேண ஸம்ஸ்காராந் ஸம்வித$_4$ாய மே॥**

**பதவுரை:–** **ப்ரியஹிதஏகாக்$_3$ரை:** – (ப$_4$க$_3$வத$_3$ாராத$_4$நத்திற்காக) ஆசார்யனுக்கு எப்பொருள்களில் ப்ரீதியுள்ளதோ, ஆசார்யனுக்கு வர்ண, ஆஶ்ரமங்களுக்குத் தக்கபடி எப்பொருள்கள் ஹிதமோ (நன்மை பயப்பனவோ) அப்பொருள்களை ஸம்பாதிப்பதில் ஒருமித்த மநஸ்ஸையுடைய, **ப்$_4$ருத்யை:** – கோயிலண்ணன் முதலான ஶிஷ்யர்களாலே, **ப்ரேமபூர்வம்** – அன்போடுகூட, **உபாஸிதம்** – முற்கூறியபடி ப்ரியமாயும், ஹிதமாயுமுள்ள ப$_4$க$_3$வத$_3$ாராத$_4$னத்திற்கு உரிய பொருள்களைக் கொண்டுவந்து ஸமர்ப்பித்துப் பரிசர்யை (அடிமை) செய்யப் பெற்றவராய்க் கொண்டு, **தத் ப்ரார்த்த$_2$நா அநுஸாரேண** – அச்சிஷ்யர்களுடைய வேண்டுகோளை அநுஸரிக்க வேண்டியிருப்பதனுல் (அவர்களுடைய புருஷகாரபலத்தினுல்), **மே** – (முன் தினத்திலேயே தம் திருவடிகளில் ஆஶ்ரயித்த) அடியேனுக்கு, **ஸம்ஸ்காராந்** – தாபம், புண்ட்$_3$ரம், நாமம், மந்த்ரம், யாக$_3$ம் என்ற ஐந்து ஸம்ஸ்காரங்களை **ஸம்வித$_4$ாய** – நன்ருக (ஶாஸ்த்ர முறைப்படியே) ஒருகாலே செய்து ...

**கருத்துரை:–** முன்கூறியபடியே பெருமாள் ஸந்நிதி$_4$யில் உள்ள கம்பத்தின் கீழ்ப்பகுதியில் மாமுனிகள் எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில், அந்தரங்க ஶிஷ்யர்கள் பெருமாள் திருவாராத$_4$னத்திற்கு வேண்டியதாய் ஶாஸ்த்ர விரோத$_4$மில்லாத அரிசி, பருப்பு, பழம், பால் தயிர், கறியமுது முதலிய வஸ்துக்களை ப$_4$க்தியுடன் கொண்டுவந்து எதிரில் ஸமர்ப்பித்துப் பணிவிடை செய்ய அவற்றை அவர் அங்கீ$_3$கரித்தருளினர். 'மாட$_2$ாபத்யம் யதி: குர்யாத் விஷ்ணுத$_4$ர்மாபி$_4$வ்ருத்$_3$த$_4$யே' [யதியானவர் வைஷ்ணவமான த$_4$ர்மங்களை (பஞ்சஸம்ஸ்காரம், உபயவேத$_3$ாந்த ரஹஸ்யக்ரந்த$_2$ ப்ரவசநம், அவற்றில் கூறியபடி ஶிஷ்யர்களை அநுஷ்டிக்கச் செய்தல் தொடக்கமானவற்றை) மேன்மேலும் வளர்ப்பதற்காக, மடத்தின் அதிபதியாயிருத்தலை ஏற்றுக்கொள்ளக் கடவர்] என்று பராஶரஸம்ஹிதையிலுள்ளபடியே மாமுனிகள் மட$_2$ாதி$_4$பதியாக அழகியமணவாளனுலே நியமிக்கப்பட்டாராகையாலே கோயில் கந்தாடையண்ணன் முதலிய பல மஹான்கள் அவருக்கு ஶிஷ்யர்களாகி, வைஷ்ணவ ததீ$_3$யாராத$_4$னம் நடக்கும் அம்மட$_2$த்தில் பெருமாள் திருவாராத$_4$னத்திற்கு உதவும்படி வஸ்துக்களை ஸமர்ப்பிப்பதும் மாமுனிகள் அவற்றை அங்கீ$_3$கரிப்பதும் யுக்தமேயாகுமென்க.

முற்கூறப்பட்ட ஶிஷ்யர் பெருமக்கள் மாமுனிகள் ஸந்நிதி$_4$யில், புதிதாக வந்து

முதல்நாள் சேர்ந்த தமக்கு (எறும்பியப்பாவான தமக்கு) பஞ்சஸம்ஸ்காரம் செய்தருளும்படி ப்ரார்த்தித்தார்களாம். அவர்கள் மிகவும் வேண்டியவர்களாகையால் அவர்கள் செய்த ப்ரார்த்த$_2$னையைத் தட்டாமல் மாமுனிகள் அப்படியே செய்தாராம். அதனைக் குறிப்பிடுகிறார். பின்னிரண்டடிகளில் 'ஒரு வருஷகாலம் ஆசார்யனை உபாஸிக்கவேண்டுமென்றும், அப்படியுபாஸித்த ஶிஷ்யனுக்கே ஆசார்யன் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டுமென்றும் ஶாஸ்த்ரம் கட்டளையிடாநிற்கவும், மாமுனிகள் அப்பாவிற்கு வந்த மறுநாளே செய்தது குற்றத்தின் பாற்படாது; அந்தரங்கஶிஷ்யர்களின் ப்ரார்த்த$_2$னை – அந்த ஶாஸ்த்ரத்தைவிட ப$_3$லமுடையதாகையாலென்க. பெருமாள் திருவாராத$_4$நம் முடிந்த பிறகு இப்பஞ்சஸம்ஸ்காரங்கள் நடைபெற்றவிஷயம் 'ஆசார்யன் நன்னாளில் காலையில் நீராடி எம்பெருமானுக்கு முறைப்படி திருவாராதனம் செய்து, தீர்த்தமாடி அநுஷ்டாநம் முடித்து வந்த ஶிஷ்யனை அழைத்து, அவன் கையில் கங்கணம் கட்டி முறைப்படியே பஞ்சஸம்ஸ்காரங்களையும் செய்யக்கடவன்' என்றுள்ள பராஶரவசநத்தோடு பொருந்தும். அடுத்த ஶ்லோகத்தில் அப்பா செய்யும் யாக$_3$மாக (தே$_3$வபூஜையாக) மாமுனிகளின் திருவடிகளைத் தலையில் த$_4$ரித்தலும், அதற்கு அடுத்த ஶ்லோகத்தில் த்$_3$வய மந்த்ரோபதே$_3$ஶமும், கூறப்படுகிறபடியால் இந்த ஶ்லோகத்தில் தாபமென்கிற சங்கு, சக்கரப் பொறிகளை இரண்டு தோள்களில் ஒற்றிக்கொள்ளுதலும், புண்ட்$_3$ரமென்னும் பன்னிரண்டு திருமண்காப்புக்களை அணிதலும், ராமாநுஜதா$_3$ஸன் முதலிய நாமந்த$_4$ரித்தலும் ஆகிய மூன்று ஸம்ஸ்காரங்களே கொள்ளத்தக்கன. ஸம்ஸ்காரமாவது – ஒருவனுக்கு ஸ்ரீவைஷ்ணவனாகும் தகுதிபெறுவதற்காக ஆசார்யன் செய்யும் நற்காரியம். ஸம்ஸ்காரம் – பண்படுத்தல்–சீர்படுத்தல். (19)

20. **अनुकम्पापरीवाहैः अभिषेचनपूर्वकम् ।**
**दिव्यं पदद्वयं दत्त्वा दीर्घं प्रणमतो मम ।।**

**அநுகம்பா பரீவாஹை: அபி$_4$ஷேசந பூர்வகம்।**
**தி$_3$வ்யம் பத$_3$த்$_3$வயம் த$_3$த்வா தீ$_3$ர்க்க$_4$ம் ப்ரணமதோ மம॥**

**பதவுரை:–** **<u>அநுகம்பா பரீவாஹை:</u>**– பிறர் துன்பங்கண்டு பொறுக்கமாட்டாமையாகிற த$_3$யையின் பெருவெள்ளத்தினால், **<u>அபி$_4$ஷேசந பூர்வகம்</u>** – அடியேனை (துன்பமென்னும் தாபம் தீரும்படி) முதலில் முழுக்காட்டி அப்புறமாக, **<u>தீ$_3$ர்க்க$_4$ம்</u>** – வெகுநேரம், **<u>ப்ரணமத:</u>** – ப$_4$க்தியினால் தெண்டனிட்டு அப்படியே கிடக்கிற, **<u>மம</u>** – அடியேனுக்கு, **<u>தி$_3$வ்யம்</u>** – மிகவும் உயர்ந்த, **<u>பத$_3$த்$_3$வயம்</u>**,– திருவடியிணையை, **<u>த$_3$த்வா</u>** – தலையில் வைத்து.

**கருத்துரை:–** மாமுனிகள் – தம்முடைய தாபமெல்லாம் தீரும்படி குளிரக்கடாக்ஷித்து, ஒரு தடவை த$_4$ண்டம் ஸமர்ப்பித்து ப$_4$க்திப்பெருக்கினால் அப்படியே வெகுநேரம் கிடக்கிற தம்முடைய ஶிரஸ்ஸில் திருவடிகளை வைத்தருளினாரென்கிறார். ஒருவன் துன்பத்தால் நடுங்காநிற்க, அதுகண்டு தானும் துன்பமுற்று நடுங்குதலே அநுகம்பா என்பது. த$_3$யையென்பது இதன்பொருள். 'க்ருபா த$_3$யா அநுகம்பா' என்ற அமரகோஶம் காணத்தக்கது.

‘கிருஷ்ணனுக்குச் செய்யப்பட்ட நமஸ்காரம் ஒன்றேயாக இருந்தாலும் அது பத்து அஶ்வமேதயாக₃ங்கள் செய்து முடித்தாலொத்த பெருமையைப் பெறும். பத்துத் தடவைகள் அஶ்வமேதயாக₃ம் செய்தவன் அதன் பயனுக ஸ்வர்க்க₃போ₄க₃த்தை அநுப₄வித்துவிட்டு மறுபடியும் இவ்வுலகத்திற்குத் திரும்புவது நிஶ்சயம். க்ருஷ்ண நமஸ்காரம் செய்தவனே என்றால் பரமபத₃ம் சென்று, மறுபடியும் இவ்வுலகில் பிறவியெடுக்க மாட்டான் (விஷ்ணுத₄ர்மம் 4–36) என்பது இங்கு கருதத்தக்கது. ப₄கவானுக்குச் செய்யும் ப்ரணுமமே இப்படியானல், ஆசார்யனேக்குறித்துப் பண்ணும் ப்ரணுமத்தைத் தனியே எடுத்துக் கூற வேண்டியதில்லே. தி₃வ்யம் பத₃த்₃வயம் – ப₄க₃வானுடைய திருவடியிணையை விட உயர்ந்தது ஆசார்யனுடைய திருவடியிணையென்றபடி. ஸம்ஸாரமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான காரணமாகிய ப₄க₃வத் ஸம்ப₃ந்த₄த்தைவிட, மோக்ஷத்திற்கே காரணமான ஆசார்யஸம்ப₃ந்த₄ம் உயர்ந்ததென்று கூறும் ஸ்ரீவசநபூஷணம் (433 சூர்ணிகை) ஸேவிக்கத்தக்கது.

21 साक्षात्फलैकलक्ष्यत्वप्रतिपत्तिपवित्रितम् ।
मन्त्ररत्नं प्रयच्छन्तं वन्दे वरवरं मुनिम् ।। २१

ஸாக்ஷாத் ப₂லைகலக்ஷ்யத்வ ப்ரதிபத்தி பவித்ரிதம்।
மந்தரரத்நம் ப்ரயச்ச₂ந்தம் வந்தே₃ வரவரம் முநிம்॥

**பதவுரை:–** <u>**ஸாக்ஷாத் ப₂ல**</u> – த்₃வயமந்த்ரோபதே₃ஶத்திற்கு முக்கிய ப₂லனுகிய ப₄க₃வந் மங்க₃ளாஶாஸநத்தில், <u>**ஏக லக்ஷ்யத்வ ப்ரபத்தி பவித்ரிதம்**</u> – முக்கிய நோக்கமுடைமையைத் தாம் நினைப்பதனுலே பரிஶுத்₃தி₄யை உடையதாகும்படியாக, <u>**மந்த்ரரத்நம்**</u> – மந்த்ரரத்நமாகிய த்₃வயமந்த்ரத்தை, <u>**ப்ரயச்ச₂ந்தம்**</u> – உபதே₃ஶித்துக்கொண்டிருக்கிற, <u>**வரவரம்முநிம்**</u> – அழகியமணவாளரென்னும் முனிவரை, <u>**வந்தே₃**</u> – வணங்குகிறேன்.

**கருத்துரை:–** மணவாளமாமுனிகள் – தாம் ஶிஷ்யர்களுக்குச் செய்யும் த்₃வயமந்த்ரோபதே₃ஶத்திற்கு முக்கிய ப₂லனுக நினைப்பது உபதே₃ஶம் பெற்ற ஶிஷ்யர்கள் திருந்தி ப₄க₃வந் மங்க₃ளாஶாஸநம் செய்வதொன்றையே. அப்படி அவர் நினைத்தால்தான் அவர் செய்யும் உபதே₃ஶம் தூய்மையுடையதாகும். ஆகையால் அங்ஙனமே அவர் நினைத்துத் தமக்கு த்₃வயமந்த்ரத்தை ஶுத்₃தோ₄பதே₃ஶமாகும்படி உபதே₃ஶித்தாரென்று இதனுல் தெரிவித்தாராயிற்று.

முற்கூறியபடி நினையாமல், (1) பணம், பணிவிடைகள் முதலிய உலகில் காணும் ப₂லனேயோ, (2) ஶிஷ்யன் மோக்ஷம் பெறுதலேயோ, (3)தான் ஒரு ஶிஷ்யனைத் திருத்தி அதனுல் ப₄க₃வானுக்குச் செய்யும் கைங்கர்யத்தையோ, (4) தன்னுடைய தனிமை தீரும்படி தன்னேடு ஶிஷ்யன் கூடியிருக்கையாகிற ஸஹவாஸத்தையோ ப₂லனுக நினைத்து த்₃வயத்தை உபதே₃ஶித்தால், அவ்வுபதே₃ஶத்திற்கு தூய்மை குறையுமென்று ஸூசிப்பித்தபடி இது. இங்கு– ஆசார்யனுக்கு இங்கிருக்கும் நாள்களில் தே₃ஹயாத்ரைக்கு பணமோ

பணிவிடையோ தேவைப்படாதா? ஶிஷ்யன் மோக்ஷம் பெறவேண்டாமா? இங்கிருக்கும் நாள்களில் ஆசார்யன் ப4க3வானுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டாமா? நல்ல ஶிஷ்யனோடு ஸஹவாஸம் ஆசார்யனுக்கு வாய்க்கவேண்டாமா? இவையெல்லாம் நல்லவையேயன்றித் தீயனவல்லவே? இவற்றைப் பயனாகக்கருதி ஆசார்யன் செய்யும் த்3வயோபதே3ஶம் தூய்மை குன்றப்பெறுவது எப்படி? என்று ஒரு கேள்வி எழுவது இயற்கையே. அதற்கு– ஆசார்யன் விஷயத்தில் ஶிஷ்யனுக்கு உள்ள ஶேஷத்வம் (அடிமையாந்தன்மை) ஏதோ இயன்ற வரையில் சிறிது த4நம் ஸமர்ப்பித்துப் பணிவிடை செய்தாலன்றி நிலைபெருதென்று நினைக்கும் ஶிஷ்யனது நினைவால் முதற்பயன் ஸித்3தி4க்கும். யாராவது ஒருவன் மோக்ஷம் பெற்று நம்மிடம் வருவானா என்று நினைத்து அதற்கு உறுப்பாக ஒரு ஶிஷ்யனை ஓராசார்யனோடு சேர்த்து த்3வயோபதே3ஶம் பெற்றவனாக ஆக்கிய எம்பெருமானுடைய நினைவாலே ஶிஷ்யனுக்கு மோக்ஷம் ஸித்3தி4க்கும். ‘இவன் (நம்ஶிஷ்யன்) நல்ல உபதே3ஶங்களைச் செய்து ப4க3வந்மங்க3ளாஶாஸநத்திற்கு ஆளாம் படி ஒரு ஶிஷ்யனைத் திருத்துவது ப4க3வான் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பாகையாலே இது ப4க3வத் கைங்கர்யமன்றோ?’ என்று நினைத்திருக்கும் தன்னுடைய ஆசார்யன் நினைவாலே, ஆசார்யனுக்கு ப4க3வத் கைங்கர்யம் ஸித்3தி4க்கும். வெகுகாலமாக ‘யான், எனது’ என்னும் அஹங்கார மமகாரங்களாலே ஸத்தையை இழந்து கிடந்த நம்மை ஹிதோபதே3ஶம் செய்து ப4க3வந்மங்க3ளாஶாஸநத்திற்கு உரியவனாக்கிய மஹோபகார கனை நாம் ஒரு நாளும் விட்டுப் பிரியக்கூடாதென்று நினைத்திருக்கும் ஶிஷ்யனது க்ருதஜ்ஞதையாலே (செய்ந்நன்றி மறவாமையாலே) ஶிஷ்யனோடு ஆசார்யனுக்கு ஸஹவாஸம் ஸித்3தி4க்கும். ஆகையால் ஆசார்யன் தான் ஶிஷ்யனுக்கு செய்யும் த்3வயோபதே3ஶத்தை தன்னடையே ஸித்3தி4க்கும் இந்நான்கினையும் பயனாக நினையாமல், ப4க3வந்மங்க3ளாஶாஸநமொன்றையே பயனாக நினைத்து, ஶுத்3த4மாகச் செய்யவேண்டு மென்று திருவுள்ளம்பற்றி மாமுனிகள் அங்ஙனமே தமக்கு த்3வயமந்த்ரோபதே3ஶம் செய்தருளியதை இதனால் அறிவித்தாராயிற்று. இம்மந்த்ரோபதே3ஶத்தையும் மாமுனிகள் எம்பெருமானாருடைய திருவடிகளையே த்4யாநித்துக்கொண்டு செய்தாரென்று கொள்ளவேணும்; நம்முடைய ஆசார்ய கோ3ஷ்டியில் எம்பெருமானார் மிகச் சிறந்தவராகை யால் என்க. கு3ருபரம்பரையை அநுஸந்தி4த்தே த்3வயத்தை அநுஸந்தி4க்கவேண்டிய நிர்ப்ப3ந்த4முள்ளபடியினால் ‘யதீந்த்ர ஶரணத்3வந்த்3வ ப்ரவணேநைவ சேதஸா’ (16) என்று முன்பு கூறப்பட்ட எம்பெருமானாரைப்பற்றிய அநுஸந்த4ாநம் தொடர்ந்து வருவதனால் அது அவர்க்கு முன்னும் பின்னுமுள்ள ஸகலாசார்யபரம்பரைக்கும் உபலக்ஷணமாய் நின்று, அதை நினைப்பூட்டுகிறதென்பது கருத்து. ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஷ்டிக்கத்தக்க அபி4க3மநம், உபாத4ாநம், இஜ்யை, ஸ்வாத்4யாயம், யோக3ம் ஆகிய ஐந்து அம்ஶங்களில், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேண்டிய த்3ரவ்யங்களைச் சேகரித்தலாகிய உபாத4ாநமென் பது, இங்கு மாமுனிகள் த்3வயோபதே3ஶத் தின் வாயிலாக இந்நூலாசிரியராகிய அப்பாவை ஶிஷ்யராக ஏற்று, எம்பெருமானுக்குத் தொண்டனாக ஸமர்ப்பிக்க வேண்டிய

சேதநத்$_3$ரவ்யமாகச் சேகரித்தல் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டதனுல் அநுஷ்டிக்கப்பட்டதாயிற்று. இது முன்பே 'ஆத்மலாப$_4$ாத் பரம்கிஞ்சித்' என்ற பதினேராவது ஶ்லோகத்தில் ஸூசிக்கப்பட்டதென்பது நினேவில் கொள்ளத்தக்கது. (21)

22 **ततस्सार्धं विनिर्गत्य भृत्यैर्नित्यानपायिभिः ।**
**श्रीरङ्गमङ्गलं द्रष्टुं पुरुषं भुजगेशयम् ।। २२**

ததஸ்ஸார்த்த$_4$ம் விநிர்க்க$_3$த்ய ப்$_4$ருத்யைர்நித்யாநபாயிபி$_4$:।
ஸ்ரீரங்க$_3$மங்க$_3$ளம் த்$_3$ரஷ்டும் புருஷம் பு$_4$ஜகே$_3$ஶயம்॥

**பதவுரை:–** <u>**தத:**</u> – த்$_3$வயத்தை உபதே$_3$ஶித்த பிறகு, <u>**ஸ்ரீரங்க$_3$மங்க$_3$ளம்**</u> – ஸ்ரீரங்க$_3$நகருக்கு அணிசெய்பவராய், <u>**பு$_4$ஜகே$_3$ஶயம்**</u> – ஆதிஶேஷன் மேலே கண்வளர்ந்தருளுமவராய், <u>**புருஷம்**</u> –புருஷோத்தமராகிய பெரியபெருமாளே, <u>**த்$_3$ரஷ்டும்**</u> – ஸேவிப்பதற்காக, <u>**நித்ய அநபாயிபி$_4$: ப்$_4$ருத்யை: ஸார்த்த$_4$ம்**</u> – ஒருகணமும் விட்டுப்பிரியாத கோயிலண்ணன் முதலிய அடியவர்களுடன் கூடி, <u>**விநிர்க்க$_3$த்ய**</u> – தமது மட$_2$த்திலிருந்து புறப்பட்டு.

**கருத்துரை:–** இயற்கையாகவே பெருமையைப் பெற்ற பொருளேக்காட்டுகிற ஸ்ரீஶப்$_3$த$_3$ம் இங்கு ரங்க$_3$நகரத்திற்கு அடைமொழியாயிற்று. ஸ்ரீயாகிற ரங்க$_3$ம்– ஸ்ரீரங்க$_3$மென்றபடி. பெரியபெருமாள் பள்ளி கொண்டதனுல் அரங்கத்திற்குப் பெருமை ஏற்படவில்லே. பின்னேயோவென்னில் எல்லார்க்கும் பெருமையை உண்டாக்கும் பெரியபெருமாளும் தமக்கு ஒருபெருமையைத் தேடிக்கொள்வதற்காகவே வந்து சேரும்படிக்கீடாக இயற்கை யான பெருமைவாய்க்கப்பெற்றது அரங்கநகரமென்பது இவ்வடைமொழிக்குக் கருத்து. 'க்ஷீராப்தே$_4$ர் மண்ட$_3$லாத் பாநோர் யோகி$_3$நாம் ஹ்ருத$_3$யாதபி, ரதிம் கதோ$_3$ஹரிர்யத்ர தஸ்மாத் ரங்க$_3$மிதி ஸ்ம்ருதம்' (எம்பெருமான் திருப்பாற்கடல், ஸூர்யமண்ட$_3$லம், யோகி$_3$களின் ஹ்ருத$_3$யம் ஆகியவற்றைவிட அதி$_4$கமான ஆசையைப்பெற்ற இடமாதல் பற்றி இந்நகரம் ரங்க$_3$மென்று கருதப்பட்டது) என்ற ஶ்லோகம் இங்கு நினேக்கத்தக்கதாகும். இக்கருத்து எம்பெருமானுடைய நினேவைத் தழுவிக் கூறப்பட்டதாகும். நம்முடைய நினேவின்படி– மேல் 'ஸ்ரீரங்க$_3$மங்க$_3$ளம்' என்று ஸ்ரீரங்க$_3$நகருக்கும் அணிசெய்பவராக – பெருமையைத் தருமவராக எம்பெருமான் கூறப்படுவதும் கண்டு அநுப$_4$விக்கவுரியதாகும். இயற்கையாகவே பெருமைபெற்ற இரண்டு பொருள்களும் தம்மில் ஒன்று மற்றென்றுக்குப் பெருமை தருமவையாகவும் உள்ளனவென்பது உண்மையுரையாகும்.(1) புருஷ: – புரதி இதி புருஷ: என்பது முதல் வ்யுத்பத்தி. 'புர–அக்$_3$ரக$_3$மநே' என்ற த$_4$ாதுவடியாகப் பிறந்த புருஷஶப்$_3$த$_3$த்திற்கு உலகமுண்டாவதற்கு முன்பே இருந்த எம்பெருமான் பொருளாகையால் அப்பெருமானுக்கு உண்டான ஜக$_3$த்காரணத்வம் இந்த வ்யுத்பத்தியாலே குறிக்கப்பட்டது. (2) புரீ ஶேதே இதி புருஷ: என்பது இரண்டாவது வ்யுத்பத்தி. ஜீவாத்மாக்களுடைய ஶரீரத்தில் (இதயகு$_3$கையில்) தங்கியிருப்பவனென்பது இதன் பொருளாகையால் அந்தர்யாமித்வம் இதனுல் குறிக்கப்பட்டது. (3) புரு ஸநோதி இதி புருஷ: என்பது மூன்ருவது வ்யுத்பத்தி. அதிகமாகக் கொடுப்பவனென்பது இதற்குப்

பொருளாகையால், கேட்பவர் கேட்கும் மற்ற பொருள்களோடு தன்னேடு வாசியில்லாமல் எல்லாவபேக்ஷிதங்களேயும் தந்தருளும் ஔதா₃ர்யம் இதனுல் குறிக்கப்பட்டது. இம்மூன்று பொருள்களும் அழகியமணவாளப் பெருமாள் திறத்தில் பொருந்துமவையேயாம். ஆதிஶேஷன் மீது பள்ளிகொண்டிருப்பது பரம்பொருளின் லக்ஷணமென்பர் பெரியோர். ஸ்ரீரங்க₃மங்க₃ளமாய் புருஷஶப்₃த₃வாச்யனுய் பு₄ஜக₃ஶயனனுயிருக்கிற எம்பெருமானே மணவாளமாமுனிகள் ஸேவிப்பது எம்பெருமானுருடைய திருவுள்ளவுகப்புக்காகவேயன்றி வேறென்றுக்காகவல்ல என்பதும் இங்கு நினேக்கத்தக்கது. 'நித்யநபாயிபி₄: ப்₄ருத்யை:' – ஒருக்ஷணமும் விட்டு நீங்காத ஶிஷ்யர்கள் என்றபடி. ஒருமனிதனேவிட்டு நீங்காதது அவனுடைய நிழலேயன்றி வேறென்றில்லேயென்பர் உலகோர். நிழல் கூட இருளில் மனிதனேவிட்டு நீங்கும். மாமுனிகளின் ஶிஷ்யர்கள் அவரை இருளிலும் விட்டு நீங்காத பெருமையைப் பெற்றவர்கள் என்கிருர் அண்ணுவப்பங்கார்ஸ்வாமி. இதனுல் மாமுனிகள் விஷயத்தில் ஶிஷ்யர்கள் வைத்திருக்கும் ப₄க்தியின் பெருமை கூறப்பட்டது. (22)

23. महति श्रीमति द्वारे गोपुरं चतुराननम् ।
प्रणिपत्य शनैरन्तः प्रविशन्तं भजामि तम्।। २३

**மஹதி ஸ்ரீமதி த்₃வாரே கோ₃புரம் சதுராநநம்।**
**ப்ரணிபத்ய ஶநைரந்த: ப்ரவிஶந்தம் ப₄ஜாமி தம்।।**

**பதவுரை:–** **ஸ்ரீமதி** – ஐஶ்வர்யம் நிறைந்ததும், **மஹதி** – மிகப்பரந்ததுமான, **த்₃வாரே** – கோவிலுக்குச் செல்லும்வழியில், **சதுராநநம்** – நான்முகனென்று சொல்லப்படுகிற, **கோ₃புரம்** – கோபுரத்தை, **ப்ரணிபத்ய** – மனமொழிமெய்களால் வணங்கி, **ஶநை:** – மெல்ல (கோபுரத்தின் அழகை அநுப₄வித்து மகிழ்ந்திருக்கும் தம் கண்களே வருத்தப்பட்டு மெல்லத் திருப்பி) **அந்த:** – கோவிலுக்குள்ளே, **ப்ரவிஶந்தம்** – எழுந்தருள்கின்ற, **தம்** – அந்தமணவாளமாமுனிகளே, **ப₄ஜாமி** – ஸேவிக்கிறேன்.

**கருத்துரை:–** ஸ்ரீமதி, மஹதி என்பன நான்முகன் கோட்டைவாசலென்று ப்ரஸித்₃த₄மான கோவில்வாசலுக்கு அடைமொழிகள். ப்₃ரஹ்மாதி₃களும் இவ்வாசலில் புகுந்தமாத்திரத்தால் ஸகலேஶ்வர்யங்களேயும் பெறும்படிக்கீடான ஐஶ்வர்யம் மலிந்திருக்கப்பெற்றுள்ளமையும், ஸ்ரீரங்க₃நாத₂ன் தன்னடியாரெல்லாரோடும் கூடி இவ்வாசலில் ப்ரவேஶித்தாலும் நிரப்ப முடியாதபடியிருக்கும். இதன் விஶாலத்தன்மையும் முறையே இவற்ருல் குறிக்கப்படுகின் றன. சதுராநநம் கோபுரம் – இக்கோபுரம் நான்முகன் கோபுரமென்று வழங்கப்படுகிறது. தெண்டன்ஸமர்ப்பிப்பதை மனத்திஞல் நினேத்தும், 'அடியேன் தெண்டன் ஸமர்ப்பிக்கிறேன்' என்று வாயால் சொல்லியும், ஸாஷ்டாங்க₃மாகத் தரையில் படுத்தும் தெண்டனிடுவதை 'ப்ரணிபத்ய' என்ற சொல் தெரிவிக்கிறது. (23)

**देवीगोदा यतिपतिशठद्वेषिणौ रङ्गशृङ्गं सेनानाथो विहगवृषभः श्रीनिधिस्सिन्धुकन्या।**
**भूमानीलागुरुजनवृतः पूरुषश्चेत्यमीषाम् अग्रे नित्यं वरवरमुनेः अङ्घ्रियुग्मं प्रपद्ये ।। २४**

தே3வீ கே3ாத3ா யதிபதிஶடத்3வேஷிணௌரங்க3ஶ்ருங்க3ம்
ஸேநாநாதே2ா விஹக3வ்ருஷப4: ஶ்ரீநிதி4ஸ் ஸிந்து4கந்யா ।
பூ4மா நீளா கு3ருஜநவ்ருத: பூருஷச்சேத்யமீஷாம்
அக்3ரே நித்யம் வரவர முநேரங்க்4ரியுக்3மம் ப்ரபத்3யே॥

**பதவுரை:–** **தே3வீ கே3ாத3ா** – தெய்வத்தன்மை வாய்ந்த ஆண்டாள், **யதிபதி சடத்3வேஷிணௌ**– யதிராஜரான எம்பெருமானுர் சடகோபராகிய நம்மாழ்வார், **ரங்க3ச்ருங்க3ம்** – ஸ்ரீரங்கமென்னும் பெயர்பெற்ற க3ர்ப்பக்3ருஹத்தினுடைய மேற்பகுதி யான விமாநம், **ஸேநாநாத2:** – ஸேனைமுதலியார், **விஹக3வ்ருஷப:** – பக்ஷிராஜரான கருடாழ்வார், **ஸ்ரீநிதி4:** – ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு நிதி4போன்ற ஸ்ரீரங்க3நாத2ன், **ஸிந்து4 கந்யா** – திருப்பாற்கடலின் பெண்ணுன ஸ்ரீரங்க3நாச்சியார், **பூ4மா நீளா கு3ருஜந வ்ருத:** – பூமிபிராட்டியாரென்ன,பெரியபிராட்டியாரென்ன, நீளாதே3வியென்ன, நம்மாழ்வார் முதலிய பெரியோர்களென்ன என்றிவர்களால் சூழப்பட்ட, **பூருஷ: ச** – பரமபதநாதன், **இதிஅமீஷாம் அக்3ரே** – என்னும் இவர்கள் அனைவருடையவும் முன்னிலையில், **வரவரமுநே:** – மணவாளமாமுனிகளுடைய, **அங்க்4ரி யுக்3மம்** – திருவடியிணையை, **நித்யம்** – தினந்தோறும், **ப்ரபத்3யே** – தெண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

**கருத்துரை:–** மணவாளமாமுனிகள் நான்முகன் கோட்டைவாயில் வழியாக உள்ளே ப்ரத3க்ஷிணமாக எழுந்தருளும் க்ரமத்தில் ஆண்டாள், எம்பெருமானுர், நம்மாழ்வார், ஸ்ரீரங்க3விமாநம், ஸேனைமுதலியார், கருடாழ்வார், ஸ்ரீரங்க3நாத2ன், ஸ்ரீரங்க3நாச்சியார் இவர்களையும், பின்பு பரமபத3நாத2ன் ஸந்நிதி4யில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபூ4மிநீளைகளோடும் நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களனைவரோடும் கூடிய பரமபத3நாத2னையும் ஸேவித்துவிட்டு எழுந்தருளும்போது, ஒவ்வொரு ஸந்நிதி4 வாசலிலும் தாம் அவர்களை ஸேவியாமல் மணவாளமாமுனிகளை ஸேவிப்பதாக எறும்பியப்பா இதனுல் அருளிச் செய்கிருர். ஏன்? அவர்களை இவர் ஸேவிப்பதில்லையோ என்றுல் அவர்களை இவர் தமக்கு ருசித்தவர்களென்று ஸேவியாமல், தம்முடைய ஆசார்யராகிய மணவாள மாமுனிகளுக்கு இஷ்டமானவர்களென்ற நினைவோடே ஸேவிக்கிருராகையால், அப்படி இவர் அவர்களை ஸேவிப்பதைப்பற்றி இங்குக் குறிப்பிடவில்லை. எறும்பியப்பா தமக்கு ருசித்தவரென்ற காரணத்திஞல் ஸேவிப்பது மாமுனிகளொருவரையேயாகும்; இவர் ஆசார்யபரதந்த்ர ராகையால் என்க. 'எம்பெருமானை ஸேவிக்கும்போது அர்ச்சாரூபிகளாக எழுந்தருளியுள்ள அவனுடைய பரிவாரங்களையும் ப4க்தர்களையும் ஆசார்யர்களையும் பரமப4க்தியோடு நன்றுக ஸேவிக்கவேண்டும்' என்கிற ப4ரத்3வாஜவசநத்தையொட்டி, மாமுனிகள் ஸ்ரீரங்க3நாத2னை ஸேவிக்கும்போது ஆண்டாள் தொடக்கமான ப4க்தஜநங்களையும் ஸேனைமுதலியார் தொடக்கமான பரிவாரங்களையும் நன்றுக ஸேவித்தது இதனுல் கூறப்பட்டது. ஆண்டாள் 'அஹம் ஶிஷ்யா ச த3ாஸீ ச ப4க்தா ச புருஷோத்தம!' (புருஷ ஶ்ரேஷ்டரே! நான் உமக்கு ஶிஷ்யையாகவும், அடியவளாகவும், ப4க்தையாகவும் இருக்கிறேன்) என்று வராஹப்

பெருமாளிடம் விண்ணப்பித்த பூ$_4$மிதே$_3$வியின் அவதாரமாகையால் ப$_4$க்தையாகவும், ஆழ்வார்கள் கோ$_3$ஷ்டியில் சேர்ந்தவளாகையால் கு$_3$ர்வீயாகவும் ஆவது காணத்தகும். ஸ்ரீபூ$_4$நீளாதே$_3$விகள், பெரியபிராட்டியாராகிய ஸ்ரீரங்க$_3$நாச்சியார் இவர்கள் பத்நி வர்க்க$_3$த்தில் சேர்ந்தவர்கள். ஆக மணவாளமாமுனிகள் பத்நீ பரிஜந கு$_3$ருஜநஸஹிதரான ஸ்ரீரங்க$_3$நாத$_2$னை மங்க$_3$ளாஶாஸநம் செய்து வருவதையும் தாம் அம்மாமுனிகளை அவர்களெதிரில் தினந்தோறும் ஸேவிப்பதையும் இதனால் கூறினாராயிற்று.

25 **मङ्गलाशासनं कृत्वा तत्र तत्र यथोचितम् ।**
**धाम्नस्तस्माद्विनिष्क्रम्य प्रविश्य स्वं निकेतनम् ॥**

**மங்க$_3$ளாஶாஸநம் க்ருத்வா தத்ர தத்ர யதே$_2$ாசிதம்।**
**த$_4$ாம்நஸ் தஸ்மாத்$_3$விநிஷ்க்ரம்ய ப்ரவிஶ்ய ஸ்வம் நிகேதநம்॥**

**பதவுரை:–** **<u>தத்ர தத்ர</u>** – ஆண்டாள் தொடங்கிப் பரமபத$_3$நாத$_2$ன் முடிவான அந்தந்த அர்ச்சாவதார விஷயங்களில், **<u>மங்க$_3$ள ஆஶாஸநம்</u>** – (உள்ள குறைகளனைத்தும் நீங்கப்பெற்று) மேன்மேலும் எல்லையில்லாத மங்க$_3$ளங்கள் (நன்மைகள்) உண்டாக வேணுமென்னும் ப்ரார்த்த$_2$னையை, **<u>யதே$_2$ாசிதம்</u>** – அவ்வவ்விஷயங்களில் தமக்கு உண்டான ப்ரீதிக்குத் தக்கபடி, **<u>க்ருத்வா</u>** – செய்துவிட்டு, **<u>தஸ்மாத் த$_4$ாம்ந:</u>** – அந்த ஸந்நிதி$_4$யிலிருந்து, **<u>விநிஷ்க்ரம்ய</u>** – வருந்திப்புறப்பட்டருளி, **<u>ஸ்வம்நிகேதநம்</u>** – தம்முடையதான மட$_2$த்திற்குள், **<u>ப்ரவிஶ்ய</u>** – ப்ரவேஶித்து (உட்புகுந்து)

**கருத்துரை:–** மாமுனிகள் ஆண்டாள் முதலியவர்களின் ஸந்நிதி$_4$க்குச் செல்வது, அவர்களைச் ஸேவித்துத் தாம் ஒருபலனைப் பெறுவதற்காக அல்லாமல், அவர்கள்தமக்கு மங்க$_3$ளாஶாஸநம் செய்வதற்காகவேயாகையால், 'அவர்களைச் ஸேவித்து' என்னாமல், அவர்களுக்கு மங்க$_3$ளாஶாஸநம் செய்து என்றார். மங்க$_3$ளாஶாஸநம் செய்வதும் முக்$_2$யமாக எம்பெருமானார்க்கேயாகையாலும், அவருடைய உகப்புக்காகவே மற்றுள்ளவர்களுக்கு மங்க$_3$ளாஶாஸநம் செய்வதனாலும் மங்க$_3$ளாஶாஸநங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நெஞ்சில் கொண்டு, 'யதே$_2$ாசிதம்' (அவரவர்களுக்குத் தக்கபடி) என்றருளிச்செய்தாரானார். 'அநக்$_3$நி: அநிகேத: ஸ்யாத்' (ஸந்யாஸி அக்$_3$நியில் ஹோமம் செய்வதும், ஸ்தி$_2$ரமான வீடும் இல்லாதிருக்கக்கடவன்) என்று ஶாஸ்த்ர விதி$_4$யிருக்கச் செய்தேயும் 'ஸ்வம் நிகேதநம் ப்ரவிஶ்ய' (தமது மட$_2$த்திற்கு எழுந்தருளி) என்று அவர் தமதாக ஒரு இருப்பிடத்தை இங்கே குறிப்பிட்டது ஸ்ரீரங்க$_3$நாத$_2$ன் மாமுனிகளுக்கென்னவே ஓரிடத்தை நியமித்து அதில் ஸ்தி$_2$ரமாக அவரை எழுந்தருளியிருக்கும்படி ஆணையிட்டருளியதனால் குற்றத்தின் பாற்படாதென்று கருதவேண்டும். 'விநிஷ்க்ரம்ய' = (ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி$_4$யிலிருந்து வருந்தி மிகமுயன்று புறப்பட்டு) என்றது, அவ்வவர்களை விட்டுப் பிரிய மநமில்லாமையால், மட$_2$த்தில் செய்யவேண்டிய திருவாராத$_4$நம், க்$_3$ரந்த$_2$காலக்ஷேபம் முதலிய கார்யங்களுக் காகத் திரும்பி எழுந்தருளவேண்டிய நிர்ப்ப$_3$ந்த$_4$த்தைக் குறிப்பதாகக் கொள்க. (25)

*என்று ஸந்தேஹிக்கவேண்டா. அதுதான் வேண்டிற்றும் அவர்கள் வஶவர்த்தியாகாமையன்றோ? அது உனக்குமில்லையோ. அத்தை த₃ர்ஶியாய். (வாழவித்யாதி₃) வாழுகையாவது– நீ இப்போ நிற்கிற நிலைதன்னிலே ''கரிஷ்யே வசநம் தவ'' (கீ₃தை 18–73) என்கையிறே. ''த்யஜ, த்யஜ்ய'' என்று உன் முற்பட்ட நிலையைக் குலைத்து அவன் மீண்டும் அதிலே நிறுத்தினால் அது பழையநிலையாமோ? ''தவ–வசநம்'' என்றபோதே மற்றொன்றிலே நிறுத்திலும் நிற்கவேணுமிறே பழையநிலையில் ''மாஶுச:'' என்னவொண்ணாதே. (வாழவுறிதியேல்) வஶவர்த்தியாய் வாழவேணுமென்றிருந்தாயாகில். (மாமதியித்யாதி₃) அறிவுடையாரெல்லார்க்கும் வேணுங்காண் இந்த பாரதந்த்ர்யத்தாலே வந்த மகிழ்ச்சி. (9)*

***அவ.–பத்தாம்பாட்டு.*** *நிக₃மத்தில், இத்திருமொழி கற்றார்க்குப் ப₂லம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.*

***ஸ்வா.–*** *(மைத்தடமித்யாதி₃) ஒப்பனைக்கு உபலக்ஷணம் (தன்னித்யாதி₃)*

---

(வாழவித்யாதி₃) அப்படி அவன் க்ரோத₄த்துக்கு விஷயமாய் முடிந்துபோகாதே ஜீவிக்கவேண்டியிருந்தாயாகில், பெருமையையுடைய சந்த்₃ரனே! உன்பெருமைக் கீடாம்படி ப்ரீதனாய் ஓடிவா. ... ... ... ... ... ...(9)

**அவ.–** **பத்தாம்பாட்டு.** நிக₃மத்தில், இத்திருமொழி கற்றார்க்குப் ப₂லம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

**மைத்தடங்கண்ணி யசோதைதன்மகனுக்கிவை**
**ஒத்தனசொல்லி யுரைத்தமாற்ற மொளி புத்தூர்**
**வித்தகன் விட்டுசித்தன் விரித்ததமிழிவை**
**எத்தனையும் சொல்லவல்லவர்க் கிடரில்லையே.** (10)

**வ்யா.–** (மைத்தடங்கண்ணி அசோதை) கறுத்துப்பெருத்திருந்துள்ள கண்ணையுடையவளான யசோதை. அஞ்ஜநத்தாலே அலங்க்ருதமாய்ப் பரந்திருந்துள்ள கண்ணையுடையவளென்னுதல்; அஞ்ஜநவண்ணனான இவனை அநவரதம் பார்த்துக்கொண்டிருக்கையாலே, இவனுடைய திருமேனியின் நிறம் ஊறி, அத்தாலே மைத்து, இவன் பக்கல் ஸ்நேஹத்தாலே விகஸிதமான கண்ணையுடையவள் என்னுதல். (தன்னித்யாதி₃) தன்னுடைய புத்ரனான இவனுக்கு நினைவுக்கும் சொலவுக்கும்

---

***அரு.பத்தாம்பாட்டு. (மைத்தடமித்யாதி₃) ''மைத்தடங்கண்ணி'' என்றது – ஸ்வாப₄ாவிகமான கறுப்பென்றும், அஞ்ஜநத்தாலும், அஞ்ஜநவண்ணனாலும் வந்த கறுப்பென்றும் அர்த்த₂த்ரயமருளிச்செய்கிறார் (கறுத்தித்யாதி₃ வாக்யத்ரயத்தாலே). (பெருத்து) என்றவிடத்தில் பெரியதாயிருக்கை – ஸ்வாப₄ாவிக விஶாலதையாதல், ஹர்ஷத்தால் வந்த விஶாலதையாதல் என்றிரண்டர்த்த₂மருளிச்செய்கிறார் (அஞ்ஜநத்தாலேயித்யாதி₃***

*பிள்ளைசீறாமல் ஒப்பித்துத் தன்மகனென்கிறார். அவன் நினைவுக்கும் சொலவுக்கும் ஒத்தனசொல்லி. அதாவது – அதிதூ$_3$ரத்திலே ஓடுகிற அம்புலியைப் பிடித்துத் தரவேணுமென்ன; ''அவனுக்குப் பிடித்துத் தருகிறேன்'' என்று சொல்லி, பிடிக்கை தனக்கு அஶக்யமாயிருக்கையாலே பலகாலும் வரவேணுமென்று இவள் உரைத்தாளிறே. அம்புலியை இவளுரைத்த மாற்றத்தை. (ஒளியித்யாதி$_3$) அந்நிலமிதிதானே ஜ்ஞாநப்ரகாஶத்தை உண்டாக்குகையாலே ''ஒளி புத்தூர்'' என்கிறார். திருமாளிகைக்கு ''ஸ்ரீவில்லிபுத்தூர்'' என்று திருநாமமிறே. (வித்தகன்) ஸமர்த்தன். மயர்வறமதிநலம் பெறுவதற்கு முன்னே திருநந்தவநம் செய்து திருத்துழாய் பறித்துத்திருமாலை சாத்தின ஸாமர்த்யமிறே. அன்றிக்கே மங்க$_3$ளாஶாஸந ப்ரேமத்தைத் திருவுள்ளத்துக்குள்ளே உடையவரென்னுதல். (விட்டுசித்தன்) இவருடைய நிலை வடபெருங்கோயிலுடையான் திருவுள்ளத்திலே கிடைக்கையாலேயாதல்; அரவத்தமளிப்படியே அவன் தான் இவர் திருவுள்ளத்திலே எப்போதும் கிடைக்கையாலேயாதல். (விரித்ததமிழிவை) என்று இவை தன்னை யஶோதை$_3$ப்பிராட்டி சொன்ன பாசுரங்களை வ்யாஜமாகக்*

---

சேர்ந்தவையாயிருக்கிற இவற்றைச்சொல்லி, மென்மையும் வன்மையும் தோன்றும் படியாகச் சந்த்ரனைக் குறித்துச் சொன்ன பாசுரத்தை. (ஒளியித்யாதி$_3$) நிலமிதிதானே ஜ்ஞாநப்ரேமங்களை விளக்கும் தேஜஸ்ஸையுடைத்தான ஸ்ரீவில்லிபுத்தூரில் மங்க$_3$ளாஶாஸநம் பண்ண ஸமர்த்தரான பெரியாழ்வார் விஸ்தரித்தருளிச்செய்தததாய் த்$_3$ராவிட$_3$ரூபமாயிருக்கிற இவை பத்துப்பாட்டையும் ஏதேனுமொருபடி சொல்ல வல்லவர்களுக்கு து$_3$:க்க$_2$மென்பது ஒன்றுமில்லை. (10)

---

